# ஜீவ மன்னா




## அனுதினமும்

2013 செப்டெம்பர்

உன் தாய் உன்னை மறந்தாலும் என் பிள்ளையே...,
என்னால் நீ ஒருபோதும் மறக்கப்படுவதில்லை
நீ எனக்கே சொந்தம்...!

"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை."

(ஏசாயா 49:15)

## நீங்கள் ஆவியில் வளர்ச்சி பெறும் முகமாக எங்களிடமிருக்கும் இவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

### பாடல் கெசட்



- என் உயிர் இயேசுவே VOL 01 முதல் 05 வரை (சிங்களம்).
- என் உயிர் இயேசுவே VOL 01 (தமிழ்).

### பாடல் Audio தட்டும் DVD தட்டும்



- என் உயிர் இயேசுவே VOL 01 முதல் 05 வரை. Audio தட்டு (சிங்களம்).
- என் உயிர் இயேசுவே VOL 01 Audio தட்டு (தமிழ்).
- காட்சிகளோடு ''பாடல்கள்'' அடங்கிய விஷேச DVD தட்டு.

### மற்றும்



- ஞாயிற்றுக்கிழமை தேவ ஆராதனை பிரசங்கங்கள் அடங்கிய DVD தட்டு. (தமிழ் மொழிப்பெயர்ப்போடு).
- சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனை அடங்கிய DVD தட்டு.
- இயேசுவின் நாமத்தில் பேய்களை துரத்துவோம். (சிங்களத்திலும் தமிழிலும்) Audio தட்டும் எகெசட்டும்.
- வல்லமையின் இரகசியம் VCD தட்டு.




- தெய்வீக சுகத்திற்காக திரையில் கை வைத்தல் DVD தட்டு (சிங்களத்திலும் தமிழிலும்).
- விஷேட உவமைகளடங்கிய பிரசங்கங்கள் DVD தட்டு ( 01 லிருந்து 04 வரை).




- பாதாளத்தின் பயங்கரத்தினை நீங்கள் அறியீர்களா? DVD தட்டு.
- வெளிமாவட்ட தேவ ஆராதனைகள் அடங்கிய DVD தட்டு.
- இலவசமாக கொடுக்கப்படும் நற்செய்தி VCD தட்டு (சிங்களத்திலும் தமிழிலும்).

## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

### பரத்திலிருந்து இரண்டு வருடங்களாக தேவன் கொடுத்த ஜீவமன்னா தினத்தியானங்கள் !

ஜீவ மன்னா தின தியானங்கள் 24 வெளியீடுகள் வரை (இரண்டு வருடப்பூர்த்தி) முன்னோக்கி நடத்தி வந்த சகல சிருஷ்டிக்கும் எஜமானனான பிதாவானவருக்கே கௌரவமும், ஸ்தோத்திரங்களும் உரித்தாகட்டும். அன்று இஸ்ரவேல் ஜனங்கள் மன்னாவினால் போஷிக்கப்பட்டார்கள். இன்று பரத்திலிருந்து ஜீவ மன்னாவை எழுத தேவன் கொடுக்கும் ஆத்மீக அறிவுத் திறனுக்கூடாக தேவன் உங்களையும் போசிக்கின்றார். இராஜாதி இராஜாவான எம் இயேசுக்கிறிஸ்துவின் இம் மாபெரும் பணியை ஒவ்வொரு மாதமும் நாம் இறுதி வரை செய்து முடிப்பது எமது பலத்தினாலும் பராக்கிரமத்தினாலும் ஞானத்தினாலும் அல்ல, தேவனே அனைத்து வழிகளையும் செவ்வையாக்கி எனக்குத் தேவையான ஞானத்தையும் தந்தருளினார் என்றால் மிகையாகாது.

எமது ஜீவமன்னா தின தியானங்கள் உங்கள் வாழ்க்கையில் ஆவிக்குரிய மாற்றங்களை தந்து வாழ்க்கையை வெற்றிப்பாதையில் வழி நடத்துகின்றது. பெரும்பாலான வாசகர்கள் அன்றாட ஆகாரமாக ஜீவமன்னாவை உட்கொள்கிறோம், என்று எமக்கு விமர்சனக் கடிதங்களை எழுதுகிறார்கள். 'உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது.'என தாவீது சங்கீதம் 119 : 105 இல் கூறியிருக்கின்றார். திக்கற்ற ஜனங்களுக்கு எமது ஜீவ மன்னாதின தியானங்கள் அவர்களை விசாரித்து புதிய பாதையை காட்டும் படியாக செயல்படுகின்றது. கடந்து சென்ற இரண்டு வருடங்களிலும் எங்களோடு இணைந்து ஜெபத்தினால் எமக்கு ஒத்தாசை அளித்த வாசகர்களுக்கு எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகையால் தேவ பிள்ளைகளே, உற்சாகமான காணிக்கைகளினாலும் வாசகக்கட்டணங்களிலும் எமது பாரத்தை தாங்கி வரும் ஒவ்வொருவருக்கும் என் உள்ளங்கனிந்த நன்றிகள். நீங்கள் பெற்ற நன்மைகளை இன்னும் அநேகர் பெற்றுக்கொள்ளும் படியாக புதிய முகவரிகளை எங்களுக்கு கிடைக்கச் செய்யுங்கள். தேவ பிள்ளைகளே, நீங்கள் உங்கள் ஆத்துமாவை காத்துக் கொள்ள வேண்டும். பரிசுத்தத்தை, ஜெப ஜீவியத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உங்கள் வளமான ஆத்மீக வாழ்க்கைக்காக வாழ்த்துகின்றேன். 'இயேசுதுணை'

"இருவருடங்களாக ஜனங்களை போஷித்த ஜீவமன்னாவே, நாம் முன்னோக்கி போக வேண்டிய தூரமோ இன்னும் அதிகம்."

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவிற்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
*இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்*

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

# இயேசுகிறிஸ்துவின் அற்புத கிரியைகள்

## நுரையீரல் வீக்கத்திலிருந்து தெய்வீக சுகத்தைக் கொடுத்த இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!



எஸ்.அனுரா
அவதகம

கடந்த ஒன்றரை வருடக் காலமாக எனது மகளின் வயிறு வீங்கியிருந்தது. அத்தோடு தாயப்பால் குடிக்கும் போது வாந்தியெடுக்க குமட்டிக் கொண்டே இருப்பாள். இந் நிலமையின் இதன் காரணமாக நாகொட வைத்தியசாலையிலும், கொழும்பு சிறுவர் வைத்தியசாலையிலும் பரிசோதனை செய்த போது 'நுரையீரல் வீங்கியிருப்பதாகவும்.' 'வைத்திய பரிகாரங்களினால் குணப்படுத்த முடியாது எனவும்' கூறினார்கள்.

'சத்திரசிகிச்சை' இலங்கையிலே செய்ய முடியாது வெளிநாட்டிலே செய்ய '80 இலட்சம் ரூபாய்' செலவாகுமெனக் கூறினார்கள். ஆயினும் சிகிச்சை செய்ய வசதியின்மையால் நான் மிகவும் வேதனைப்பட்டேன்.

இப்படியாக துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் 'சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையை' அறிந்து குழந்தையுடன் 15 வாரங்கள் கலந்துக் கொண்டு ஜெபித்த வேளையில் குழந்தையின் சரீரத்தில் மாறுதலை உணர்ந்தேன். திரும்பவும் வைத்தியசாலையில் பரிசோதித்த போது பிள்ளைக்கு 'சத்திரசிகிச்சை அவசியமில்லையெனவும்,' இரத்தத்திலே 'சர்க்கரை' வியாதியில்லை என்றும் கூறினார்கள்.

'06 மாத காலமாக' குழந்தை ஆரோக்கியமாக வாழ வைத்த தேவனுக்கே நாம் வாழ்நாள் முழுவதும் நன்றி கடன்பட்டவர்களாய் இருக்கிறோம். இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக!

## 18 வருட கால தலைவலியும், பிசாசின் பிடியிலிருந்து விடுதலையும்!



ஜூட் பெரேரா
கனேமுள்ள

நான் கடந்த 'பதினெட்டு வருட' காலமாக கடுமையான தலை வலியுடன் கூடிய பிசாசின் பிடியினால் மிகவும் வேதனைப்பட்டேன். அநேக வேளைகளில் 'சுய உணர்வின்றி' அலைக்கழிக்கப்பட்டேன். மூன்று வருட காலமாக இந்தப் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்ள மாந்திரீக பரிகாரங்களை செய்தேன்.

இந்த வேளையில் எனது மகள் இங்கு நடைபெறும் 'சனிக்கிழமை விடுதலை ஆராதனையைக்' குறித்து கேள்விப்பட்டு என்னை அழைத்து வந்தார். ஆராதனை வேளையில் தேவதாசனுடைய 'ஜெபத்தினால்' '18 வருடமாக' என் சரீரத்திலிருந்த பிசாசின் பிடியிலிருந்து சம்பூர்ண விடுதலையும், '18 வருட' தலைவலியிலிருந்து சுகத்தையும் பெற்றுக் கொண்டேன்.

பணத்தை செலவழித்தும் பெற்றுக்கொள்ள முடியாத சுகத்தை இலவசமாக தேவன் கொடுத்தபடியால் தேவனாகிய இயேசுகிறிஸ்துவுக்கே முழு உள்ளத்தோடு நன்றி செலுத்துகிறேன். சகல மகிமையும் அவருக்கே!

ஜீவ மன்னா
செப்டெம்பர் 01
ஞாயிறு

# எம்மை மேன்மைப்படுத்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
யோசுவா
அதி: 18 – 19

**"...இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடிவரும்; அவர் உன்னை மேன்மைப்படுத்தியிருக்கிறார்."** (ஏசாயா 55:5)

என் அன்புமிகு தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **"இன்றைய நாளும் சந்தோஷத்தில் நீங்கள் நிறைந்திருக்கும் நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்."** இந்த மாதத்தில் முதல் நாளில் இருக்கும் உங்களுக்கு இம்மாதம் முழுவதும் தினமும் கர்த்தரை அறிகின்ற அறிவு உங்கள் வாழ்வில் பெருகும்படியாய் பிரார்த்திக்கின்றேன். பூமியில் வாழ்கின்ற எல்லா மனிதர்களின் மத்தியிலும் உங்கள் தேவனாகிய பிதாவானவர் உங்களைத் தெரிந்துக் கொண்டு **"ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கி தன் சொந்த ஜனங்களாக, பரிசுத்த ஜனங்களாக உங்களை"** வேறுப்படுத்திக் கொண்டபடியால் நீங்கள் **"விஷேசித்தவராக"** இருக்கின்றீர்கள்.

தேவ பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட **ஏசாயா 55:5**இல் தேவ வசனத்தில் குறிப்பிடுகிறதாவது **"எங்கள் தேவனானவர் எங்களை மேன்மைப்படுத்தியிருக்கிறார்"** என்றாகும். மாம்சமான உலகில் ஜீவிக்கின்ற மனிதர்களாகிய நாம் அனைவரும் எம்மை **"மேன்மையாக"** உயர்த்தப்படுவதைக் காண மிகவும் பிரியமுள்ளவர்களாக இருக்கின்றோம். ஆனால் பல சந்தர்ப்பங்களில் வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றபடியால் பெரும்பாலானோர் நிந்தை, அவமானமடைந்து விடுகின்றார்கள். திருமண வாழ்வில் ஏற்படுகின்ற வீழ்ச்சி, பொருளாதார பிரச்சினைகள் காரணமாக ஏற்படுகின்ற **"குழப்பங்கள்,"** காரணமாக மனிதர்களுக்கு முகங் கொடுக்க முடியாமல் ஆதரவற்றிருக்கும் மனிதர்கள் அநேகர், இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏற்படுகின்ற அவமானத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் சிலர் தான் பிறந்த ஊர், நாட்டையும் கூட கைவிட்டு போகிற சந்தர்பங்களுண்டு. **"ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள்."** உங்கள் தேவனாகிய கர்த்தரினால் நீங்கள் உண்மையிலேயே **"அதிர்ஷ்டக்காரர்கள்."** ஏனென்றால் தேவன் எமது **"சுய கௌரவத்தை மேன்மைப்படுத்துகிற, பாதுகாக்கின்ற தேவன்".** நீங்கள் தேவனது **"உரிமையான பிள்ளைகள்"** என்பதாலும், தேவன் உங்களைப் **"படைத்த தேவ பிதா"** என்பதாலும், தேவன் உங்களை **மேன்மைப்படுத்தியிருக்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் உண்மையான வாழ்க்கை வாழ்வீர்களானால், அத்தோடு நீதியைக்கடைப்பிடிக்கும் வாழ்க்கை வாழ்வீர்களானால், உங்கள் தேவன் உங்களோடிருந்து உங்களை **ஆசீர்வதிப்பாராக!** இன்றைய நாளில் ஏதாவது உங்களது பிழையின் நிமித்தம் நீங்கள் அவமானத்திற்குள்ளாகி இருக்கின்றீர்களா? சமுதாயத்தில் நீங்கள் தள்ளப்பட்டவராய் இருக்கின்றீர்களா? நீங்கள் செய்த **பிழையாக** இருப்பினும் நீங்கள் முழுமனதோடு **மனஸ்தாபப்பட்டு** உங்கள் பலவீனத்திலிருந்து மீட்பு பெற **இரக்கத்தைப்** பெற்றுக் கொள்ளுங்கள். தனிமையான, பலவீனனான உங்களைப் புறம்பே ஒரு போதும் தள்ளாத தேவன் உங்களை **மன்னித்து** மீண்டுமாக தன் கரங்களினால் உங்களை உயர்த்துவாராக! நீங்கள் தாழ்த்தப்பட்ட, அவமானப்பட்ட இடத்திலேயே தேவன் மீண்டுமாக மேன்மைப்படுத்துவாராக! **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே, நீங்கள் என்னை மேன்மைப்படுத்தும் தேவன் இன்றும் நீங்கள் என்னோடிருப்பதினால் நன்றி. நீங்கள் என்னுள் கிரியை செய்து உங்கள் நாமத்தை உயாத்துங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்." (சங்கீதம் 91:14)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 02 திங்கள்

## எல்லாப் பயத்திற்கும் எம்மை நீங்கலாக்கி மீட்கும் இரட்சகர்!

இன்றைய வேதவாசிப்பு

யோசுவா அதி: 20 – 21

**"நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்."** (சங்கீதம் 34:4)

தேவ ஜனங்களே! ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் **"இன்றைய தினம் மகிழ்ச்சிகரமான தினமாய் அமையும்படி"** வாழ்த்துகிறேன். நான் ஜீவித்த இந்த **"ஐம்பத்து ஏழுவருட"** காலமும் இந்தப் **"புவிதனில்"** நான் பெற்றுக் கொண்ட **"அறிவைப்"** பார்க்கிலும் அதிகமான அறிவுத் திறமையை என் தேவ பிதாவானவருக்கூடாக தான் பெற்றுக் கொண்டேன். அவருடைய **"ஆவியானவருக்கூடாக"** எமது வாழ்க்கை பயணத்தைக் குறித்தும், எம் ஆத்மீக ஜீவியத்தைக் குறித்தும், இந்த உலகத்தை குறித்தும் அநேக காரியங்களை அறிந்துக் கொள்ளக் கூடிய **"அறிவை"** பெற்றுக் கொண்டேன்.

தேவ பிள்ளைகளே! **"ஜீவ மன்னா"** சஞ்சிகையை நாளாந்தம் படித்தறிந்து **"தேவ வார்த்தைகளுக்கூடாக"** தனது **"அறிவை"** வளர்த்துக் கொள்ளும் நீங்கள் **"அதிர்ஷ்டமானவர்கள்."** இன்றைய தேவ வார்த்தை **சங்கீதம் 34:4**இல் நான் கர்த்தரை தேடினேன். அவர் எனக்குச் **"செவி கொடுத்து என்னுடைய எல்லாப் பயத்திற்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்"** என்பதாகும். மனிதர்களுடைய வாழ்க்கை பயம் என்னும் சுபாவம் நிறைந்துள்ளது. ஒரு சிறு காரியத்திலும் **"பய"** உணர்வுள்ளவனாக இருக்கிறான். வாழ்க்கையில் ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளுக்கு கூட முகம் கொடுக்க முடியாதபடி பயந்து தங்களை மறைத்துக் கொள்ளும்படியாய் **"ஓடிப் போகிறவர்களும்"** இருக்கிறார்கள். பய உணர்வினால் பிரச்சினைகளை எதிர் கொள்ள முடியாத **"பலவீனராய், தைரியமற்றவர்களாய்"** நொடிந்து போகிறவர்களும் உண்டு. ஆயினும் சத்திய தேவனை அறிந்தவர்கள் **"பாக்கியவான்கள்."** ஏனெனில் எப்போதும் சர்வ வல்லவர் உங்களோடிருக்கிறார். உங்கள் வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடும் எல்லா வேதனைகள், பிரச்சினைகள், சவால்கள், போராட்டங்களின் வேளையிலும், தேவனை நோக்கி அபயமிடும் போதும், அவரே தஞ்சமென்று ஜெபங்களை ஏறெடுக்கும் போது உங்கள் அருகில் வந்து அரவணைத்து ஆறுதல்படுத்தி, விடை கொடுத்து, **"பயம் நீக்கி"** உள்ளத்திற்கு **"பெலத்தையும்"** சமாதானத்தையும், **"தைரியத்தையும்"** வரப்பண்ணுவார். காரிருளில் பேரொளி தோன்றச் செய்வார்.

தேவ பிள்ளைகளே! **"கலங்காதிருங்கள்"**. எமது வாழ்வில் சகல பிரச்சினைகளும் **"முடிவுறும்"** நாட்களோ, **"நன்மைக்கேதுவான"** காரியங்கள் மாத்திரம் நடைபெறும் நாட்களையோ நாம் காண முடியாது. ஏனெனில் **"நாள்தோறும் சிலுவைப் பாரத்தை சுமக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். பரிசுத்தவான்களுக்கு உபத்திரவம் அநேகம்"** என வேத வார்த்தை கூறுகிறது. உங்களுக்கு விரோதமாக கிரியை செய்யும் **"சத்துருவானவன்"** உங்கள் வாழ்வை **"தோல்வியடையச்"** செய்ய, வாழ்வை **"நிர்மூலமாக்க"** எவ்வளவு முயற்சிகளை மேற் கொண்ட போதிலும் இதோ **"உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"**என பரி:**மத்தேயு 28:20**இல் வாக்களித்தவர் ஜீவ நாட்களெல்லாம் உங்களோடிருக்கிறார். உங்களை **"காத்து"** அருள்புரிவார். **இன்றும் ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் பரலோக தகப்பனே! சர்வ வல்லமையும் சம்பூரணமும் நிறைந்தவரே. என் வாழ்வில் காணப்படும் பய உணர்வுகளை நீக்கி என்னை தைரியப்படுத்தி பெலத்தால் நிரப்புங்கள். வல்லமையுள்ள இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (2 தீமோத்தேயு 1:7)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 03
செவ்வாய்

## கண்ணீரோடு விதைத்து கெம்பீரமாக அறுவடை செய்யுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
யோசுவா
அதி: 22 – 23

**"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்."**
(சங்கீதம் 126:5)

அன்பும் கிருபையும் மனதுருக்கம் நிறைந்தவருமான ஜீவனுள்ள தேவனுடைய அநுக்கிரகத்தை பெற்றவர்களே! இயேசுகிறிஸ்துவின் **"வல்லமையான நாமத்தினால் ஆசீர்வதித்து"** வாழ்த்துகிறேன். இன்றைய நாளின் உங்கள் நாளாந்த கடமையை செய்ய தொடங்கும் முன்பாக அதிகாலைப் பொழுதினிலே படைப்பின் கர்த்தரை நோக்கி துதித்து அவருடைய பாதப்படியில் **"ஜெபங்களை"** ஏறெடுத்து ஜீவ மன்னா நாளிதழை கற்றறிந்து, **"தேவ வார்த்தைகளை" "தியானித்து"** ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றவர்கள் பாக்கியவான்கள் நீங்கள் கடந்து செல்லவிருக்கும் இன்றைய தினத்தில் நீங்கள் சந்திக்கும் எல்லாக் காரியங்களையும், பிரச்சினைகள், துன்பங்கள், சவால்கள்,யாவற்றையும் **"சமாளிக்கத்தக்கதான"** தைரியத்தை பெற்றுக் கொள்வீர்கள். **"தேவனுடைய வார்த்தைகள்"** உங்கள் உள்ளத்தை ஆத்துமாவை **"பெலப்படுத்தும்"** ஆறுதலைக் **"கட்டளையிடும்."**

எமது தியான தினத்தின் இன்றைய வேத வார்த்தைக் கூறுகிறது. **"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்."** என்பதாக இன்றும் இதை **"வாசிக்கும்."** நீங்கள் உங்கள் ஆத்மீக பயணத்தில் விருப்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் செல்கிறீர்களா? அல்லது கண்ணீரோடும் வேதனையோடும் நடக்கிறீர்களா? பிரச்சினை, வேதனை, சோதனைகள் மத்தியில் ஆத்மீக வழிப்பயணத்தில் கண்ணீரோடு கடந்து செல்லுபவர்களாயின் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! நீங்கள் வேதனைகளுக்கு மத்தியிலும் ஆண்டவருடைய காரியங்களில் ஊக்கமாக, மனம் தளராது கண்ணீரோடு விதைக்கிற விதைகள் கெம்பீரத்தோடு அறுக்கும்படியாய் தேவ அநுக்கிரகம் உங்கள் மேல் இறங்கிக் கொண்டிருக்கிறது. இன்றும் நீங்கள் உங்கள் ஆவிக்குரிய பயணத்தில் சந்திக்கும் எல்லாக் காரியங்களில் உங்கள் உள்ளம் தைரியத்தோடு இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆண்டவர் **"எல்லா வேளைகளிலும்."** உங்களோடிருக்கிறார். அவருடைய வல்லமையைக் குறித்து எப்போதும் தியானியுங்கள். தற்போது நீங்கள் துன்பத்தை வேதனையை அநுபவித்த போதும் இதற்கு **"முன்னர்"** அநேக ஆசீர்வாதங்களையும், நல்ல ஈவுகளையும் கொடுத்த **"நல்ல கர்த்தரைக்"** குறித்து **"நன்றியோடு தியானித்து"** துதித்து முழு உள்ளத்தோடு அவர் சமுகத்தில் நில்லுங்கள். அவரை குறித்து **"விசுவாசத்தோடு"** காத்திருங்கள் கெம்பீரமான அறுவடையை எதிர்பாருங்கள்.

தேவ பிள்ளைகளே! என் ஆத்மீக பயணமானது பதினெட்டு வருடகாலமாக அவமானங்களுடன் துன்பத்திற்கு மத்தியிலும் கடந்து வந்தேன். ஆயினும் நான் **"கண்ணீரோடே விதைக்கும்படியாய்"** தேவனுக்கு கீழ்படிந்து அவரின் சித்தத்திற்கு ஏற்றபடி என்னை ஒப்பு கொடுத்ததால் இன்றைய நாட்களில் **"கெம்பீரத்தோடே அறுக்கும்படியாய்"** கிருபை செய்தார். அந்த கண்ணீரின் காலங்களை கடந்து வந்து தற்போது வல்லமையான தேவ ஊழியத்தை செய்ய தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டேன். நீங்கள் கண்ணீரோடே விதைக்கிறவர்களாய் இருக்கிறீர்களா? கெம்பீரத்தோடு அறுவடை செய்யும்படியான ஆசீர்வாதத்தை பெறுவீர்கள். **இன்று ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என்னை நேசிக்கும் தேவாதி தேவனே! என்னை தெரிந்துக் கொண்டவரே!
உங்கள் பிள்ளையாக மாற்றினவரே! என் விருப்பமல்ல உங்கள் சித்தம்
நிறைவேறும்படியாய் என்னை ஆசீர்வதியுங்கள்.
இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாசகத்தத்தம்

"மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்."
(2 கொரிந்தியர் 4:17,18)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 04

புதன்

**உங்கள் விருப்பத்தையல்ல தேவனுக்கு பிரிமானவைகளை நிறைவேற்ற உங்களை அழைத்த தேவன் !**

**இன்றைய வேதவாசிப்பு**

யோசுவா 24
நியாயாதிபதிகள் 01

**"...ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்."** (பரி:மாற்கு 8:34)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளும் **"உங்களுக்கு மகிழ்ச்சிகரமான நாளாக உதயமாக"** வேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன். எங்கள் ஜீவிக்கின்ற பரலோக தேவ பிதாவானவர் **"உருவாக்கும்"** தேவனாவார். இயற்கை காட்சிகளை கண்ணோக்கும் வேளையில் தேவனின் **"படைப்பு"** எவ்வளவு மனரம்மியமானது, எவ்வளவு விசித்திரமானது என்று எங்களுக்கு எண்ணத் தோன்றுகிறது. அப்படியானால் தனது சுய விருப்பத்தின் பேரில் தேவனது பிள்ளைகளாகும்படி, உலகில் தேர்ந்தெடுத்து வேறுபடுத்திய தேவன் எமது வாழ்க்கையை அழகுபடுத்துவதற்காக எவ்வளவு ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பார்? என்று நாங்கள் சற்று நினைத்துப் பார்ப்போம்.

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து தமது பரலோகப் பிதாவின் **"விருப்பத்தின்"** படி எங்களை இவ்வுலகத்தில் தேர்ந்தெடுத்தாரென்பதை தேவ வசனத்தில் காண்கிறோம். **"பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என் சித்தத்தின்படியல்ல. என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன், என பரி:யோவான் 6:37,38இல்"** எழுதப்பட்டுள்ளது. **"என் பிதாவின் விருப்பம் என்னவெனில் குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனடைவான்."** என்று இயேசு வெளிப்படுத்தியுள்ளார். ஆனாலும் ஆத்மீக பிள்ளைகள் தேவனை நோக்கி ஜெபிப்பது தன் உள்ளத்தில் இருக்கும் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வேண்டும் என்பதற்கேயாகும். அப்படியானால் தனது எதிர்காலத்தைக் குறித்து பிள்ளைகளைப் பற்றி, பிள்ளைகளது எதிர்காலம், குடும்ப அங்கத்தினர்களின் பிரச்சினைகளைப் பற்றியவைகளாகும். அவர்களது ஜெப நேரத்தில், பெரும்பாலான நேரம், அவர்களின் சுய காரியங்களைக் குறித்து மாத்திரம் செலவிடுகின்றபடியால் அவர்களுக்கு சில வேளைகளில் தேவனின் **"பதில்"** கிடைப்பதில் **"தாமதம்."** ஏற்படலாம். **ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் விருப்பத்திற்கு மேலாக தேவனின் **"நினைவுகள்"** மிகவும் **"மேலானவைகள்."** ஆகையால் **பரி:மாற்கு 8:34**இன்படி **"உங்கள் விருப்பத்தை கைவிட்டு"** உங்கள் தேவனின் சித்தம் உங்களுக்குள் நிறைவேற உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். நீங்கள் **"தோல்வியடைவது"** தேவ சித்தமல்ல. **உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்து உங்கள் அருகாமையால் கிட்டிச் சேர்த்து உங்கள் பிள்ளையாக்கிக் கொண்டீர்கள். என் விருப்பமல்ல. உங்கள் விருப்பம் நிறைவேற என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே." (எரேமியா 29:11)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 05
வியாழன்

நீங்கள் முழு உள்ளத்தோடு தேவனை விசுவாசிக்கும் போது அதிசயங்களை அற்புதங்களைச் செய்யும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
நியாயாதிபதிகள்
அதி: 02 – 03

**"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை."** (மத்தேயு 13:58)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள ஒரே மீட்பராகிய **"இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளும் அருமையான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்."** நாம் அனைவரும் மனிதர்களாக பூமியில் வாழ்ந்தாலும் பரலோக தேவ பிதாவின் மூலம் தனது சொந்த ஜனங்களாகும்படி எங்களை எல்லா ஜாதிகளின் மத்தியிலும் தெரிந்தெடுத்து வேறுபடுத்தி **"தேவனது உரிமையான பிள்ளைகளாக்கிக்"** கொண்டார். ஆகையால் நாங்கள் பரலோக ராஜ்யத்திற்கு **"உரிமை"** பெற்றுள்ளபடியால் பரலோக **"வாசிகளாவோம்."**

தேவ பிள்ளைகளே! மேற்கூறப்பட்ட **பரி:மத்தேயு 13:58** தேவ வசனத்தில் கூறப்படுகிறதாவது **"மனிதர்களின் விசுவாசமில்லாத காரணத்தினால் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை என்றாகும்."** இதிலிருந்து எமக்கு தெளிவாகின்றதென்னவென்றால் எங்கள் **"விசுவாசத்தின் பெருக்கமே"** தேவனது **"வல்லமையான செயல்கள்"** அற்புதங்கள் அதிகமாக நடைபெறுவதற்கு காரணம் என்று அல்லவா? ஆகையால் நீங்கள் எவ்வேளையிலும் தேவன் பேரில் **"விசுவாசத்தை"** பூரணப்படுத்திக் கொள்ளுங்கள். தேவபிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் **"நூற்றுக்கதிபதியைக் குறித்து மத்தேயு 8ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது."** அவனது வீட்டில் வேலைக்காரன் திமிர்வாதமாய்க்கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக் கொண்டான். அதற்கு **"இயேசு நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்."** அதற்கு நூற்றுக்கதிபதி பிரதியுத்தரமாக **"ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்"** அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான். இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவனது **"மகாப்பெரிய விசுவாசத்தைக்"** கண்டு அவனிடம் **"நீ போகலாம் நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார்."**

தேவ பிள்ளைகளே! **"அந்த நாளிகையிலேயே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்"** என்பது அதே அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று நூற்றுக்கதிபதியின் விசுவாச வெளிப்பாட்டின் காரணமாக **"இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை"** என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என மனிதர்களின் முன்னிலையில் அவரைக் குறித்து **"பாராட்டிய"** இயேசுகிறிஸ்து இன்று உங்கள் **"விசுவாசத்தை"** பார்த்துக் கொண்டிருக்கிறார். உங்கள் கண்களிலே காண்பவைகளுக்கு உங்கள் உள்ளத்தை செல்லவிடாது உங்கள் தேவனாகிய இயேசுவின் பேரில் அவரின் **"வல்லமையைக் குறித்து"** அதிகமாக சிந்தியுங்கள். உங்கள் விசுவாசத்தைக் குறித்து பிரியப்படும் தேவன் இன்றைய நாளிலும் உங்கள் வாழ்க்கையில் **"அற்புதங்களைச்"** செய்வாராக! **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் பிள்ளைகளின் விசுவாசத்தைக் குறித்து பிரியப்படுகின்ற தேவனாக இருக்கின்றீர்கள், என்னுடைய வாழ்க்கையில் நீங்கள் அற்புத, அதிசய காரியங்களை நிகழ்விக்க எனது விசுவாசத்தை அதிகரிக்கும்படியாக ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்." (பரி:யோவான் 14:13)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 06 வெள்ளி

## உங்கள் பிள்ளைகள் மீது பொழியும் தேவக் கிருபை !

இன்றைய வேதவாசிப்பு

நியாயாதிபதிகள் அதி: 04 – 05

**"உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்."**
(சங்கீதம் 128:3)

சகல விதமான நன்மைகளையும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் எம் ஜீவனுக்கு அதிபதியுமான இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தைக் கொண்டு **"இன்றைய தினம் அதிர்ஷ்டம் மிகுந்ததாயிருக்குமாறு"** வாழ்த்துகிறேன். உலகில் **"சூரிய"** உதயத்தைக் காணும் மனிதன் ஒரு **"புதிய நாளை"** பெற்று மகிழ்ச்சியடைகிறான். பறவையினங்கள் தன் இனிய குரலை இசைத்து **"புதிய நாளைக்"** குறித்து மகிழ்கிறது. இந்த பூமி புதிய படைப்புகளை பெற்றுக் கொள்கிறது. படைத்தவருடைய **"நியதியின்படி சூரியன்"** இன்றும் செயலாற்றுகிறது கர்த்தர் சூரியனை உருவாக்கிய போது என்ன கட்டளை கொடுத்தாரோ! அந்த வார்த்தைகள் இந்நாள்வரை நிறைவேறுவதை எண்ணிப் பாருங்கள்.

அன்பார்ந்தவர்களே! **சங்கீதம் 128:3** தேவ வார்த்தை உங்கள் **"பிள்ளைகளை"** குறித்து அவருடைய வெளிப்பாடாக உள்ளது. உங்கள் பிள்ளைகளை குறித்ததான அவருடைய **"கிருபையை உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள்"** என்று வெளிப்படுத்துகிறது. உங்கள் பிள்ளைகள் மீது **"கிருபையுள்ளவராய்"** விளங்குகிறார் அல்லவா? அவர்களை **"ஆசீர்வதித்து"** அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்தி சம்பூரணப்படுத்தி **"வளமான"** வாழ்க்கையாக எம்மை வழி நடத்துகிறார். அவர்கள் வாழ்வில் வெற்றிப் பெறுவது அவருடைய அநுகிரகத்தாலே தான். பெற்றோர்கள் யாவரும் **"தங்கள் பிள்ளைகள் வாழ்க்கையை"** தேவ கரங்களில் **"ஒப்புவித்து"** இடைவிடாமல் தேவ பாதத்தில் **"ஜெபிக்கிறவர்களாய்"** இருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகள் கீழ்ப்படியாதவர்களாகவும் முரட்டுத்தனம் உள்ளவர்களாக, பிடிவாதமுள்ளவர்களாக இருந்தாலும், தேவனானவர் அவர்களை பணிவுள்ள நல்ல குண இயல்புகளை கொண்ட நல்லவர்களாக மாற்ற வல்லவராயிருக்கிறார். அவர்கள் உங்கள் **"பிள்ளைகள்"** என்பது **"இயற்கை".** ஆயினும் தாயின் கர்ப்பத்தில் **"உருவாக்கி"** உலகத்தில் **"பிறக்கச் செய்தவர் படைப்பின் தெய்வமே."** ஆகையால் அவர் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலங்களை மாற்றி அமைத்து **"ஆசீர்வதித்து"** வாழ்க்கையை வளமாக செழிக்கச் செய்வார்.

தேவனுடையவர்களே! இச் செய்தியை வாசிக்கும் நீங்கள் வாலிப பருவத்தில் இருப்பவரா, அல்லது சிறு பிள்ளைகளாக இருந்தாலும் உங்களுக்கு இன்று கர்த்தர் சொல்லுகிறார் அவர் உங்களை மிகவும் **"நேசிக்கிறார்"** என்று இதை சிந்தனையில் கொண்டு செயலாற்றுங்கள். உங்கள் **"உள்ளத்தை"** தேவனுக்கு **"அர்ப்பணியுங்கள்".** அவருடைய **"சிநேகத்தால்,"** அன்பினால் உங்கள் இருதயத்தை உள்ளத்தை **"நிரப்பி"** விடுங்கள். உங்கள் **"வாழ்வை"** அவர் கரத்தில் **"ஒப்புவித்து"** கீழ்படிந்து, தாழ்மையுடன் ஜீவியுங்கள். தேவன் உங்களை ஒலிவமரக் கன்றுகளைப் போல வளரும்படி **ஆசீர்வதிப்பார். கிருபையின் நாள்!**

**ஜெபம்**

எங்களை உருவாக்கினவரும் எங்களை நேசிக்கிறவருமான பரலோக தேவனே! உங்கள் மாறாத கிருபைக்காக ஸ்தோத்திரம். ஒலிவமரக் கன்றுகளாக் எங்கள் பிள்ளைகளை வளரச் செய்கிறவரே, எங்கள் பிள்ளைகளை உங்களிடத்தில் ஒப்புக் கொடுக்கிறோம். இயேசுவின் நாமத்தில்.

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது." (சங்கீதம் 103:17)

ஜீவ மன்னா

செப்டெம்பர் **07**

சனி

# உங்கள் துன்பங்களையெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ளும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

நியாயாதிபதிகள் அதி: 06 – 07

**"கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும்."** (சங்கீதம் 132:1)

அன்புமிகு தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **"இன்றைய நாள் நன்மைகள் நிறைந்த நாளாக வேண்டுமென வாழ்த்தி"** பிரார்த்திக்கின்றேன். தேவனின் சொந்த பிள்ளைகளான நீங்கள் அனைவரும் **"மிக அதிர்ஷ்டசாலிகளும் ஆசீர்வாதம் பெற்றவர்களுமாவீர்கள்"**. ஏனென்றால் நீங்கள் தேவனிடம் **"பிறந்தபடியால்"** ஆகும். **"ஆகையால் தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்."** என்று **1 யோவான் 5:4**இல் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! ஆகாயத்தையும், பூமியையும் படைத்து ஆளுகை செய்கின்ற பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற எங்கள் தேவனானவர் இந்த பூவுலகில் இருக்கின்ற சிறிய மனிதர்களான எம்மை இவ்வளவாக **"நினைவு"** கூறும்படிக்கு நாம் எம்மாத்திரம் என நான் சிந்திப்பதுண்டு. தேவன் அவ்வளவாக தான் **"படைத்த பிள்ளைகளைக்"** குறித்துத் தன் கவனத்தைச் செலுத்தியிருப்பது தேவன் அவர்கள் மீது இருக்கும் **"அளவற்ற அன்பினால்"** என்று நான் நினைக்கின்றேன். என்னுடைய ஆத்மீக வாழ்க்கையில் தேவனாகிய கர்த்தரின் **"அன்பைக்"** குறித்து நான் பெற்றுக் கொண்ட அனுபவங்களோ அதிகம். சில சந்தர்ப்பங்களில் சில சிக்கல்கள், பிரச்சினைகள், அல்லது உபத்திரவங்களால் என்னுடைய உள்ளத்தில் வேதனையோடு தேவனை நோக்கி ஒரு சிறிய **"சிந்தனையை"** உண்டாக்கும் போது, அத்தருணமே தேவன் என் உள்ளத்திற்கு அதற்கான **"பதிலைத்"** தருவார். ஆகையால் எனக்கு மாத்திரமல்ல தேவனை நேசிக்கின்ற எல்லா பிள்ளைகளுக்கும் தேவன் காட்டும் அன்பு **"அதி விஷேடமானது."** இன்றைய நாளில் மேற் கூறப்பட்டுள்ள **சங்கீதம் 132:1**இல் வேதாகம வசனத்தில் கூறப்படுகின்றதாவது **"கர்த்தாவே தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும் என்றாகும்"** ஆகையால் **"நீங்கள் மனங் கலங்காதிருங்கள்."**

தேவ பிள்ளைகளே! உங்கள் உபத்திரவங்களில், பிரச்சினைகளில், கவலைகளில், ஆபத்துகளில், உங்கள் உறவினர், அயலவர், நண்பர்கள், உங்கள் குடும்ப அங்கத்தினர்கள் கூட சில வேளைகளில் உங்களை **"கைவிட்டு விடலாம்."** உங்களைத் தனிமையாக்கி உங்களை **"அநாதையாக"** விடவும் இடமுண்டு. ஆனாலும் தேவன் அப்படியாகச் செய்ய மாட்டார். உங்கள் முழு உள்ளத்தோடு தேவனை நோக்கிப் பாருங்கள் நீங்கள் படும் சகல **"வேதனைகளையும்,"** பாடுகளையும்தேவன் நினைவுகூர்ந்து தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என் துன்ப துக்கங்களை காண்கிற தேவன். என்னுடைய பிரச்சினை, துன்பம், உபத்திரவங்கள் அனைத்தையும் நினைத்து ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்." (சங்கீதம் 81:14)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 08

ஞாயிறு

## பரலோக பிதாவிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வது எப்படி?

இன்றைய வேதவாசிப்பு

நியாயாதிபதிகள் அதி: 08 – 09

**"மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்."**
(பரி:மத்தேயு 21:22)

அன்பான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்றவரும் பலத்த கிரியைகளை செய்கிற அற்புத தேவனுடைய அதிசயமான நாமமான இயேசுகிறிஸ்து என்னும் **"நாமத்தினால்" "இன்று நல்ல நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன்."** எமது இரட்சகருடைய **"நாமத்தை"** அறிந்த நீங்கள் **"பாக்கியவான்கள்."** ஏனெனில் நீங்களும் நானும் பரத்திலிருந்து கிரியை செய்கிற எங்கள் தேவனுடைய **"சுவீகாரபுத்திரர்களாக"** தெரிந்துக் கொள்ளப்பட்டது இயேசுகிறிஸ்துவினூடாகவே.

தேவ பிள்ளைகளே! **"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!"** இன்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது **"நீங்கள் கேட்பதை எப்படி பெற்றுக் கொள்வது"**என்று கற்றுத் தருகிறது. **பரி:மத்தேயு 21:22ல் "மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாக ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்"** என்பதாக எழுதப்பட்டுள்ளது. ஆகையால் தேவனுடையவர்களே, நீங்கள் பரலோக **"பிதாவிடம்"** எதை கேட்கும் போதும் **"விசுவாசத்தோடு"** கேட்க உங்களை நீங்கள் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். **"இரு மனமுள்ளவர்களாய்"** சந்தேக உள்ளத்தோடு **"ஜெபிக்க"** வேண்டாம். **"அசைக்கப்பட"** முடியாத **"விசுவாசத்தில்"** நம்பிக்கையோடு கேளுங்கள். உங்கள் விசுவாசம் அளவு கடந்ததாக, சிந்தனைக்கடங்காதாக இருக்க வேண்டும். அவர் சிந்தைனைக்கு அப்பாறபட்ட **"சுழல்காற்றில் கொண்டு செல்கிறதான ஓயாமல் அலைபாயுகின்ற கடல் கொந்தளிப்பை ஆணையிட்டு நிறுத்தர் வல்லவர்"** என்பதை வசனங்கள் கூறுகிறது. தேவனிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை விசுவாசிக்க மறுக்கிறார்கள். அதுமாத்திரமல்ல வேறுப்பட்ட உள்ளத்தால் **"இருமனமுடையவர்களாக தங்கள் வழிகளில் உறுதியற்றவர்களாக"** இருக்கிறார்கள்.

தேவ பிள்ளைகளே! இன்று உங்களது பிரச்சினை எதுவாக இருப்பினும். அதைக் குறித்து சிந்தித்து **"கவலைப்படாதீர்கள்." "அவர் சமூகத்தில"** முழங்கால்படியிட்டு அவரை நோக்கி நம்பிக்கையோடு **"ஜெபியுங்கள்."** நீங்கள் கேட்பது எதுவாகிலும் அவருடைய **"வார்த்தைகளின்படி"** அவருடைய **"விருப்பத்தின்படி"** அவருடைய சித்தம் நிறைவேற வேண்டுமென நாம் **கேட்கும் போது, "கேளுங்கள் அப்போது உங்களுக்கு கொடுக்கப்படும்"** என்று **"வாக்களித்தவர்"** அதை **"நிறைவேற்றுவார்."** நீங்கள் அவரிடம் கேட்பதை அவர் நிச்சயமாக செய்வார் என உறுதியோடு நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள். நாள்தோறும் **"வேதத்தை வாசித்து"** தியானித்து உங்கள் **"விசுவாசத்தை"** வளர்த்துக் கொள்ளுங்கள். இன்று **"ஆசீர்வாதத்தின் நாள்."**

ஜெபம்

எனக்கன்பான என் தேவனே! இன்றைய தினத்திலும் உங்களிடமிருந்து பெற்றுக் கொள்வது எப்படியென்று கற்றுக் கொடுத்த பிரசங்கத்திற்காக நன்றி தகப்பனே! என் விசுவாசம் பெருகத்தக்கதாக அருள் புரியுமாறு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்."
(பரி:யோவான் 16:23)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 09
திங்கள்

## இரண்டாம் நாளுக்குப்பின் எங்களை உயிர்ப்பித்து மூன்றாம் நாளில் எங்களை எழுப்பும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நியாயாதிபதிகள்
அதி: 10 – 11

**"இரண்டு நாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்."** (ஓசியா 6:2)

அருமையான என் தேவ பிள்ளைகளே! மரணத்தை ஜெயங்கொண்டு உயிரோடெழுந்து இன்றும் எம் மத்தியில் ஜீவிக்கின்ற ஒரே தேவனாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் **"இன்றும் வெற்றிச் சிறந்த நல்ல நாளை பெற்று மகிழும்படி வாழ்த்துகிறேன். மரித்து உயிரோடெழுந்த"** ஒரே தேவன் எமது இரட்சகர் **"இயேசுகிறிஸ்து"** மாத்திரமே என்பதை நாம் அறிவோம்.

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்து மரித்து **"மூன்றாம் நாள் உயிரோடெழுந்தார்."** அவர் **"பெத்தானியா"** என்ற கிராமத்தில் **"லாசரு"** என்ற மனிதனை, **"நாயின் பட்டணத்தில்"** ஒரு விதவையின் **"ஒரே மகனையும்"** மரணத்திலிருந்து எழுப்பினார். இன்றும் அப்படியே கிரியை செய்ய வல்லவராக கிரியை செய்பவராக இருக்கிறார். ஆகையால் எமது இரட்சகர் **"இயேசுகிறிஸ்துவானவர்"** எங்களுக்காக சிலுவையில் தம்மையே **"பலியாக"** ஒப்புக் கொடுத்தார். மரித்த மூன்றாம் நாளில் **"மரணத்தை"** வெற்றிச் சிறந்தவராய் **"உயிரோடெழுந்து"** வந்தார். இன்றும் எங்கள் மத்தியில் **"ஜீவனுள்ளவராய்"** வாசம்பண்ணுகிறார் என்றும் அவர் எம்மையும் (மனிதர்களையும்) **"உயிர்த்தெழச் செய்வார்,"** என்ற **"விஷேசித்த விசுவாசம்"** எமக்குள் இருக்கிறது. எமது பிரதான தேவ வார்த்தையில் **ஓசியா 6:2** கூறுகிறது. **"இரண்டு நாளுக்கு பின்பு அவர் நம்மை உயிர்பிப்பார். "மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார். நாம் அவருடைய சமூகத்தில் பிழைத்திருப்போம் என்று." "உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!"** உங்களுக்கு ஏற்பட்ட பெரும் பிரச்சினைகள், போராட்டங்கள், துன்பங்கள், சவால்கள், மூலம் பெரும் கலக்கமடைந்து உங்கள் தேவனை **"மறந்து போய்"** அவரை விட்டு விட்டு உலக **"மனிதர்களிடம்"** உதவி உபகாரங்கள் பெற்றுக் கொண்டீர்களா?

தேவனுக்கு பிரியமானவர்களே! இயேசுகிறிஸ்து சிலுவையில் **"மரித்து"** திரும்பவும் மகிமையின் உயிர்ப்பை பெற்றுக் கொள்ளும் முன்னர் **"இரண்டு தினங்கள் அடக்கமாய் இருந்திருக்கிறார்."** ஆயினும் மூன்றாம் நாள் அடக்கம் செய்யப்பட்ட அந்த நிலையிலிருந்து உயிர்த்தெழுந்திருக்கிறார். அவர் **"அடக்கம் செய்யப்பட்ட இடத்தின் எல்லாத் தடைகளையும்"** உடைத்தெறிந்து **"உயிர்த்தெழுந்தார்."** உங்கள் துன்ப துயரங்களில், கஷ்டமான நிலையில் சோதனை வேளைகளில் அவர் தூரமாயிருப்பது போல் தோன்றினாலும். அல்லது பதில் கிடைக்க தாமதமானாலும், அமைதியாக அவரது சந்நிதானத்தில் **"பாதப்பலிபீடத்தில் பிரார்த்தனை செய்யுங்கள்."** உங்கள் விண்ணப்பங்கள் **"விசுவாசத்துடன்"** ஏறெடுங்கள். உங்கள் உள்ளத்தை விசுவாசமென்னும் வாக்குத்தத்த வசனங்களால் அனல் மூட்டுங்கள். எத்தனை தினங்கள் **"கடந்தாலும்"** விசுவாசத்தோடு **"அவரை நோக்கி"** எதிர் பார்த்திருங்கள். தைரியத்தை இழந்து போகாதீர்கள். அவர் உங்களுக்கு **"ஜெயம்"** கொடுக்க வல்லவர். **ஜெயம் தரும் நாள்!**


ஜெபம்

எமக்கு வழிகாட்டும் எம் தெய்வமே! உங்கள் இன்றைய நாளின் பிரசங்க செய்திக்காக ஸ்தோத்திரம். இன்றைய நாள் முதல் விசுவாசத்தோடு உங்களையே பற்றிக்கொண்டு, உங்களை நோக்கிப் பார்த்து ஜெயம் பெறுக் கொள்ளும்படியாய் என் வாழ்க்கைப் பாதையில் ஜீவிக்க செய்தருளும் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என்னிமித்தம், என்னிமித்தமே, அப்படிச் செய்வேன்; என் நாமத்தின் பரிசுத்தம் எப்படிக் குலைக்கப்படலாம்? என் மகிமையை நான் வேறொருவருக்குங்கொடேன்." (ஏசாயா 48:11)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 10
செவ்வாய்

# நாம் ஜீவிக்கின்ற தேவனின் பிள்ளைகளாவோம் !

இன்றைய வேதவாசிப்பு
நியாயாதிபதிகள் அதி: 12 – 13

**"...நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்."**
(ஓசியா 1:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் உங்களுக்கு **"இனிய நாளாக வேண்டுமென உங்களை வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன்."** இன்றைய நாளிலும் ஆயிரம் பிரச்சினைகளை மனதில் நிறைத்துக் கொண்டு இன்று நான் எப்படியாவது இவைகளுக்கு தீர்வை தேடி விடுவேன் என்ற நினைவோடுங் கூட நாளை ஆரம்பித்தீர்களா? அப்படியானாலும் **"மனங்கலங்காதிருங்கள்."**

தேவ பிள்ளைகளே! நீங்கள் **"ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவைக்"** குறித்து அறிந்து தேவன் உங்கள் வாழ்க்கையில் மீட்பர் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தீர்களானால், அவரது நாமத்தைக் குறித்து **"விசுவாசித்தீர்களானால்"** நீங்கள் பரத்தில் இருக்கின்ற படைத்த சிருஷ்டிகரான தேவ பிதாவானவரின் **"சொந்த பிள்ளைகளாக"** இருப்பீர்களென **பரி:யோவான் 1:12**இல் காண்கிறோம். அது மாத்திரமல்ல, மேலே குறிப்பிட்ட **ஓசியா 1:10**இன் பிரதான வேதாகம வசனம் என்றாகும். உங்களுக்குக் கூறுகின்றதாவது உங்கள் பரலோகப் பிதா **"நீங்கள் ஜீவனுள்ள தேவனது மகன் அல்லது மகள்"** என்று சொல்லப்படுவீர்கள் என்றாகும். தேவ பிள்ளைகளே, நீங்கள் ஒன்றையும் குறித்தும் கவலைப்படாதீர்கள். எங்கள் தேவனாகிய கர்த்தர் வாயிலிருந்து புறப்படும் எந்தவொரு வசனமும் **"பொய்யாவதும்", "வீணாகப்"** போவதுமில்லை. தேவன் எங்களுக்குக் கொடுத்த பொருத்தனைகளில் எந்தவொன்றையும் மாற்றாமல் அவற்றை அவ்வாறகவே **"செயல்படுத்துவார்."** அவரது பொருத்தனைகள் நிறைவேறாத வண்ணம் நிறுத்த யாராலும் முடியாது. அப்படியானால் நீங்கள் ஜீவிக்கின்ற தேவனின் பிள்ளைகளானபடியால் நீங்கள் **"மிகவும் அதிர்ஷ்டக்காரர்களாவீர்கள்."** உங்கள் தேவ பிதாவானவர் சர்வ வல்லமையுள்ள, பராக்கிரமமுள்ள தேவனானவர், தேவனால் **"செய்ய முடியாத காரியங்கள் ஒன்றுமில்லை."** சகலவற்றையும் **"வாய்க்கப்"** பண்ணுகின்ற பரலோகப் பிதா உங்களை **"மகனே"** என்றழைப்பாரெனின் அது எவ்வளவு **"வரப்பிரசாதமென்று"** நினைத்துப் பாருங்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் பெற்றோரின் **"உரிமைகள்"** உங்களுக்கு சொந்தமானதல்லவா? அவர்கள் **"தகுந்த நேரத்தில்"** வருகை தந்து அவைகளை உங்களுக்கு உரிமையாக்கிக் கொடுக்கின்றார்கள். உங்களைச் சிருஷ்டித்த தேவனும் **"அப்படியே".** தேவன் **"பரலோகப் பலகணிகளைத்"** திறந்து உங்களுக்கு ஆசீர்வாதத்தை பொழிந்தருளுவார். உங்கள் **"விசுவாசத்தை"** அதிகரித்துக் கொள்ளுங்கள். **"தேவனுடைய பிள்ளைகள்"** என்று சொல்லப்படுகின்ற எங்களைத் தேவன் ஒரு போதும் **"கைவிட மாட்டார்". "வெற்றிச் சிறந்த நந்நாள்."**

ஜெபம்

என் தேவனே! என்னை உங்கள் பிள்ளையாக வேறுபடுத்தியமையால் நன்றி. ஆகையால் உங்கள் ஆசீர்வாதங்களுக்கு உரிமை கொள்வதற்கு எனக்கு வரப்பிரசாதம் கிடைக்கப்பட்டுள்ளது. நீங்கள் என்னை ஆசீர்வதியுங்கள்! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்." (கலாத்தியர் 4:7)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 11
புதன்

## யுத்தங்களை முறித்து ஷேமத்தைக் கொடுக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நியாயாதிபதிகள் அதி: 14 – 15

**"...வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களைச் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப்பண்ணுவேன்."**
(ஓசியா 2:18)

அன்பான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **"இன்றைய நாளும் அருமையான நாளாக வேண்டுமென"** வாழ்த்தி உங்களுக்காக பிரார்த்திக்கின்றேன். நாங்கள் அனைவரும் உண்மையிலேயே **"மிக அதிர்ஷ்டக்காரர்களாவோம்."** ஏனென்றால் எங்கள் ஜீவனுள்ள சர்வ வல்லமை பொருந்திய தேவ பிதாவானவர் இன்று எமக்கு கூறுகின்றதாவது **"தேவன் எமது யுத்தத்தை நிறுத்தி யுத்தம் இல்லாதபடிக்கு முறித்து, எங்களை சுகமாக ஆறுதலோடு வாழச் செய்யும்"** தேவன் என்றாகும்.

தேவ பிள்ளைகளே! **ஓசியா 2:18** பிரதான வேதாகம வசனத்தில் எழுதியுள்ளதாவது **"தேவன் வில்லையும், பட்டயத்தையும், யுத்தத்தையும், தேசத்திலே இல்லாமலாக்கியதைக்"** குறித்தாகும். இதற்கூடாக உங்களுக்கு சொல்கிறதாவது **"உங்கள் வாழ்க்கையில் இருக்கும்"** யுத்தத்தைப் பற்றியாகும். **"ஆனாலும் எனது ஜீவியத்திலென்றால் யுத்தமே இல்லை"** என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனாலும் தேவ பிள்ளைகளே! **"நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"** என்று **2 தீமோத்தேயு 4:7** இல் பவுலடியார் கூறியிருக்கின்றார். **"நற்செய்தி ஊழியங்களில்"** ஈடுபடும் வேளை அநேக உபத்திரவங்கள், சோதனைகள், சவால்களுக்கு முகங் கொடுக்க அவருக்கு நேரிட்டது. ஆனாலும் தேவன் அவை அனைத்திலும் அவரோடு கூட இருந்து **"பாதுகாத்து சகல தீமைகளிலும்"** அவரை **"காத்துக்"** கொண்டார். அப்படியே **"நித்திய ஜீவனை"** பெறும் பொருட்டு தேவன் எங்களை வேறுபடுத்திக் கொண்டமையால் **"எங்கள் வாழ்க்கை பயணத்திற்குள்"** தந்திரமாக வலை விரித்துக் கொண்டிருக்கும் எங்கள் விரோதியான **"சாத்தானோடு"** எங்களுக்கு **"யுத்தம்"** மேற்கொள்ள வேண்யிடிருக்கின்றது. **"நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள்"** என்று **எபேசியர் 6:11**இல் எழுதப்பட்டிருக்கின்றது. என்னவெனின் **"சத்தியம்"** என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், **"சமாதானத்தின் சுவிஷேசத்திற்குரிய"** ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், விசுவாசமெனும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாயும், **"இரட்சணியமெனும்"** தலைச்சீராவையும், **"தேவ வசனமாகிய"** ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொண்டவர்களாயும் எதிர்த்து நில்லுங்கள்.

தேவ பிள்ளைகளே! **"சாத்தான்"** பலவிதமான எண்ணங்களை மனதிற்குள் ஏற்படுத்தி **"அவன்"** எங்கள் மனதில் குழப்ப நிலையை உருவாக்கி, அநேக **"உபத்திரவங்களைக்"** கொடுத்து உங்களையே **"யுத்தக்களமாக்கி"** விடுவான் நீங்கள் தேவனுக்குள் தைரியமாயிருங்கள். தேவன் **"உங்கள் யுத்தத்தை இல்லாமலாக்கி சுகமாய்"** வாழ வழி வகுப்பார். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எமது யுத்தங்களை முறித்து போடும் தேவன். நீங்கள் வல்லமையான தேவன். உங்களில் வல்லமையாக, பெலனாக இருக்க உதவி செய்யுங்கள். சத்துருவானவனிடமிருந்து ஜெயம் பெற்றுத் தாருங்கள். இயேசுவின் நாமத்தில்.~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான்." (2 நாளாகமம் 20:17)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 12
வியாழன்

# உன்னைப் போல் உன் அயலானை நேசிக்கும்படி உங்கள் உள்ளத்தை மாற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நியாயாதிபதிகள் அதி: 16 – 17

**"இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக..."** (பரி:மாற்கு 12:31)

மகா பரிசுத்தரும் காருண்யம் நிறைந்தவருமான ஜீவிக்கின்ற தேவனுடைய ஜீவனுள்ள **"இயேசு"** என்னும் வல்லமை பொருந்திய மகிமைக்குரிய நாமத்தினால் **"அருமையான தேவ பிள்ளைகளே!" "உங்களை ஆசீர்வதிக்கிறேன்."** தேவன் எமக்களித்த இந்த நல்ல நாளிலே அவரில் மகிழ்ந்திருப்போம். பரலோக தகப்பனுடைய **"சொந்தப் பிள்ளைகளாக"** மாற்றப்பட்டு, அவருடைய மகா **"அன்புக்கு"** பாத்திரவான்களாகும்படி உரிமையைப் பெற்ற நாங்கள் **"பாக்கியவான்கள்."** அவர் அன்பின் தேவன். **"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!"**

பிரியமானவர்களே! மேலே தரப்பட்ட வேத வசனம் கூறுகிறது, கர்த்தர் எமக்கு கொடுத்த **"இரண்டாவது கற்பனையேயாகும்." "உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக"** என்பதாக. தன்னை தான் நேசிப்பது போல் **"மற்றவர்களையும்"** நேசிக்குமாறு கர்த்தர் **"கட்டளை"** கொடுத்துள்ளார். **"மற்ற மனிதர்கள் எமக்கு என்ன செய்ய வேண்டும் எனவும் நாங்கள் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்."** என்றும் வெளிப்படுத்தியுள்ளார். உங்களுக்கு ஏற்படும் துன்பவேளைகளில், பிரச்சினைகள் மத்தியில், எதிரிகள் எமக்கு விரோதமாக வரும் வேளைகளில், சந்தோஷமான விருந்து உபசார காரியங்களை அயலவர்கள், உறவினர்கள் கலந்து உதவி ஒத்தாசைகள் செய்ய வேண்டும் எனவும், ஆபத்து வேளையில் சடுதியாக உடனிருந்து உபகாரம் செய்யும்படியாக எதிர்பார்ப்பதும், விரும்புவது போல் ஆறுதலான, நம்பிக்கையூட்டும் வார்த்தைகளில் தேற்றப்படுவதை விரும்புவதை போல அவர்களும் **"உங்களிடம்"** இப்படியான காரியங்களை **"எதிர் பார்க்கிறார்கள்"** என்பதை உணர்ந்து செயல்படுங்கள். தேவ பிள்ளைகளே! நீங்கள் ஒருவருக்கு செய்த **"உதவி உபகாரங்களை"** அல்லது நீங்கள் அவர்கள் வாழ்வில் அறிந்து கொண்ட **"இரகசியங்கள்,"** பலவீனங்கள், குறைபாடுகள் இவைகளை **"மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி"** அவர்கள் **"வெட்கப்படவோ"** மனவேதனைபடவோ நீங்கள் கிரியை செய்தால் அவர்களுக்கு **"துரோகியாக"** மாறுவீர்களானால், உங்கள் **"உள்ளத்தில் மெய் அன்பு இல்லை"** இதே போன்ற ஒரு காரியத்தை அவர்கள் உங்களுக்கு செய்தால் உங்கள் நிலையையும், உங்கள் வேதனை எப்படிப்பட்டதாக இருக்கும் என நினைத்து பாருங்கள்.

உங்கள் அயலவர்கள் உங்களை **"நேசிக்காவிட்டாலும்"** நீங்கள் அவர்களை **"நேசிக்கும்"** அளவு அவர்களுக்கு உங்களிடம் அன்பு இல்லை என அறிந்தாலும் மனக்கிலேசம் அடையாதீர்கள் ஏனெனில் வேதவசனம் கூறுகிறது **"உங்களை சிநேக்கிக்கிறவர்களையே" "நீங்கள் சிநேகிப்பீர்களானால்" "உங்களுக்கு பலன் என்ன?"**. ஆகையால் **"அயலவர்களுக்காக ஜெபியுங்கள்."** அவர்கள் நன்மைகளை பெற்றுக் கொள்ள முக்கியமாக அவர்களின் அறியாமை **"விலகி" "இரட்சிப்பை"** பெற்றுக் கொள்ள மன்றாடுங்கள். தேவ **"கட்டளையை"** நிறைவேற்றும் போது பரலோக **"ஆசீர்வாதம்"** உங்களை வந்தடையும். உங்களுக்கு **"மீண்டுமொரு வெற்றியின் நாள்."**

ஜெபம்

மகிமை நிறைந்த பரலோக ராஜாவே! உங்கள் பிரமாணங்கள் பரிசுத்தமானது. அவைகள் எமக்கு ஆசீர்வாதத்தை கொண்டுவரும் என்னை போல் பிறரையும் நேசிக்கும் உள்ளத்தைப் பெற்றுக் கொள்ள எனக்கு தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது." (1 கொரிந்தியர் 13:13)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 13 வெள்ளி

**ஏழைகளை நீதி நியாயம் விசாரித்து வாழ்க்கை தரத்தை உயர்த்தும் தேவன் !**

இன்றைய வேதவாசிப்பு

நியாயாதிபதிகள் அதி: 18 – 19

**“நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து,...”** (ஏசாயா 11:4)

வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இன்றைய தினம் வல்லவரான இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் **“மகிழ்ச்சிகரமான நாளாக வேண்டுமென”** பிரார்த்திக்கின்றேன். இவ் **“உலக தேசங்களின்”** வாழும் மனிதர்களின் வருமானம் குறைவினால் வாழ்க்கை வசதியின்மையால் **“ஏழைகள்”** என கணிக்கப்படக் கூடிய ஜனங்கள் சகல தேசங்களிலும் இருக்கிறார்கள் என்பதைக் காணலாம். ஆயினும் **“படைப்பின்” “தேவனானவர்”** எமது பரலோக பிதா ஏழைகளுக்கு **“கிருபை”** செய்கிறவராகவும், அவர்கள் ஒவ்வொருவரை குறித்தும் **“அக்கரை”** உள்ளவராய் இருக்கிறார் என்பதை இன்று அறிந்துக் கொள்ளுங்கள். **“அதனால் நீங்கள் கலங்காதிருங்கள்.”**

தேவனுடைய பிள்ளைகளே! **“நீதிமொழிகள் 22:2இல் ஐஸ்வரியவானும் தரித்திரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் கர்த்தர்”** என எழுதப்பட்டுள்ளது. பணவசதிப் படைத்தவர்கள் மீது அவருடைய கிருபையும் அன்பும் **“அதிகமாயிருக்கிறது”** எனவும். ஏழைகள் மீது இருக்கிற கிருபையும் அன்பும் **“குறைவுப்பட்டதாயிருக்கிறது”** என **“நினைக்காதீர்கள்”.** உங்கள் வாழ்வில் காணப்படும் ஏழ்மையின் நிமித்தம் உங்களை **“படைத்த தெய்வம் இரண்டாவது”** பட்சமாக நடத்தமாட்டார் என்பதை நிச்சயமாக விசுவாசியுங்கள். எனது இருபத்தொன்பது வருட ஊழியத்தில் பெற்றுக் கொண்ட அநுபவங்கள் அநேகம். இதன் மூலம் நான் அறிந்த காரியம் **“இயேசு அற்புதர் என்பதும்” “நீதியின் தேவன்”** அவர் என்பதாகும் ஆகையால் உங்கள் வருமானம், வாழ்க்கையின் தராதிரம் எந்த நிலமையில் இருப்பினும். உங்களை அவர் அறிந்துக் கொண்டபடியால் அவர் உங்களை **“பெயர்”** சொல்லி அழைத்தபடியால் நீங்கள் **“அதிர்ஷ்டசாலிகள்”. ஏசாயா 11:4**இன் வசனத்தின்படி **“நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்து”என்று கூறப்பட்டுள்ளது.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவராயினும் உங்களை தெரிந்துக் கொண்டவரால். அவருடைய **“பிள்ளைகளாகிய”** உங்கள் வாழ்க்கை தரத்தை **“உயர்ந்த”** வருமானத்தை அதிகரிக்கச் செய்ய அவரால் கூடும். உங்கள் தொழில், வியாபாரம், நீங்கள் கையிட்டுச் செய்யும் எல்லா காரியங்களை **“ஆசீர்வதித்து”** உங்கள் ஏழ்மையை மாற்றவும் நாளுக்கு நாள் உங்கள் வருமானத்தை **“வளரச் செய்யவும்”** தேவன் வல்லவராய் இருக்கிறார். அவர் பாதத்தில் சரணடைந்து **“தாழ்மையுடன்”** இருங்கள். யாரும் உங்களை **“தொந்தரவு”** செய்ய அனுமதிக்கமாட்டார். நியாயம் செய்வார் நீதியை நிலைநாட்டுவார். சிறுமையை நீக்குவார். அவர் ஏழைகளின் இரட்சகர். **“ஆசீர்வாத்தை”** உங்களுக்கு **“உரிமையாக்குவார்.”வெற்றியின் நாள்!**

ஜெபம்

ஐஸ்வரியத்தின் தேவனே! ஏழைகளுக்கு நீதி நியாயம் கிடைக்கச் செய்பவரே. வறுமை விலகும்படியாய் ஆசீர்வதிக்கும் அன்பரே! என்னையும் என் வருமானத்திற்குரிய காரியங்களையும், தொழில்களையும் ஆசீர்வதித்து ஏழ்மை நீங்கும்படியாய் என் வாழ்க்கை தரத்தை உயர்த்துங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அவர்கள் தாபரிக்கும் ஊரைக் காணாமல், வனாந்தரத்திலே அவாந்தரவழியாய்,” (சங்கீதம் 107:4)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 14
சனி

## துயரப்படுகிற நாளில் எமது வேண்டுதலுக்கு பதில் தரும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
நியாயாதிபதிகள் அதி: 20 – 21

**"நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; நீர் என்னைக் கேட்டருளுவீர்."** (சங்கீதம் 86:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு **"இன்றைய நாளும் அருமையான நாளாக வேண்டுமென"** பிரார்த்திக்கின்றேன். ஜீவிக்கின்ற தேவனைப் பற்றி **"அறிந்துக் கொள்ளவும்,"** அவர் பேரில் **"விசுவாசம் கொள்ளவும்" "வரப்பிரசாதம்"** பெற்றுக் கொண்ட நீங்கள் மிகவும் **"விஷேசித்தவர்களாவீர்கள்."** ஏனென்றால் மேற் குறிப்பிட்ட **சங்கீதம் 86:7**இல் தேவ வசனத்தில் குறிப்பிடுகின்றதாவது **"உங்கள் துன்பத்தின் நாளில் நீங்கள் தேவனை நோக்கி ஜெபிக்கும் போது தேவன் உங்களுக்கு பதில் தருவார்"** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! உங்கள் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு, உங்கள் திருமண வைபவத்திற்கு அல்லது உங்கள் இல்லத்தில் நடைபெறும் ஏதாவதொரு **"மகத்தான வைபவத்திற்கு"** உங்கள் நெருங்கிய நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு, அயல்வாசிகளுக்கு நீங்கள் **"அழைப்பு"** கொடுக்கின்ற வேளை, அனைவரும் உங்கள் **"அழைப்பை"** மிகச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு உங்கள் வீட்டுக்கு வந்து அந்த வைபவத்தில் பங்கு பெற்று உங்களோடு **"சந்தோஷத்தை"** பகிர்ந்துக் கொள்ளுவார்கள். ஆனாலும் உங்களுக்கொரு துன்பம் ஏற்படும் வேளைகளில் **"உங்கள் இல்லம் வந்து துன்பத்தில் பங்குகொள்ளுகின்றார்களா?"** என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சில வேளைகளில் **"ஒருமுறை"** அல்லது **"இரண்டுமுறை"** ஏதாவதொரு பிரச்சினையைப் பற்றி, அல்லது துன்பத்தைக் குறித்து நீங்கள் யாருக்காகிலும் கூறும் போது, மீண்டுமாக **"மூன்றாவது"** முறையும் அவரைச் சந்தித்து உங்கள் கவலையைக் கூற முற்படும் நேரத்தில் **"அவருடைய முகம் வேறுபடும் விதத்தையும், உங்களை அலட்சியம் பண்ணும் விதத்தையும்"** உங்களால் கண்டு கொள்ள முடியுமல்லவா? அப்படியாயினும் **"நீங்கள் கலங்காதிருங்கள்."** ஏனென்றால் மனிதனைப் போல் **"அல்ல"** எங்கள் தேவனானவர் எங்கள் வாழ்க்கையில் **"நன்மையான காரியங்கள்"** நடைபெறுகின்ற வேளைகளில் மாத்திரமல்ல, எங்களுக்கு **"ஆபத்து, துன்பங்கள்"** அல்லது **"உபத்திரவங்கள்"** ஏற்படுகின்ற வேளையிலும் தேவனின் **"கண்கள்"** பூமியிலுள்ள எம்மை நோக்கிய வண்ணமாக இருக்கும்.

தேவ பிள்ளைகளே! **"ஒருமுறை இருமுறை"** அல்ல. **"பல முறைகள்"** கேட்பீர்களாயினும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு **"ஒத்தாசை, துணை செய்ய"** எல்லா வேளைகளிலும் உங்களை **"வேண்டாம்"** என்று புறக்கணியாது கிருபை செய்வாராக! ஆகையால் முழு மனதோடும் தேவனை **"விசுவாசித்து"** உங்கள் காரியத்தைக் குறித்து தேவனை நோக்கி **"ஜெபியுங்கள்." "மனிதர்களைப்"** போல் தேவன் உங்களைத் **"துச்சமாக எண்ணாது"** உங்கள் **"குரலுக்கு பதில்"** தருவாராக! **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! எனது துன்பமான நாளில் நான் உங்களுக்கு ஜெபிக்கிறேன். நீங்கள் எனக்கு பதில் கொடுக்கும் தேவனாகையால் ஸ்தோத்திரம். இன்றும் என் வாழ்க்கையை உங்களுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். நீங்கள் என்னுடனே இருக்கும்படியாக இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தண்ணீரைப்போல் ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று." (சங்கீதம் 22:24)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 15
ஞாயிறு

# வியாதிப் படுக்கையில் உங்களை தாங்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ரூத்
அதி: 01 – 02

**"படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்;... " (சங்கீதம் 41:3)**

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் **"உங்களுக்கு ஆனந்தக் களிப்பால் நிறைந்த நாளாக வேண்டுமென"** வாழ்த்துகிறேன். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் "வைத்தியரானவர்." தேவன் உங்களை **"சுகப்படுத்தும்"** தேவனாகவிருக்கிறார். **"உலகில் வைத்திய விஞ்ஞானத்திற்"** கூடாக அநேகமானவைகளை நிகழச் செய்கின்றார்கள். ஆனாலும் வைத்திய விஞ்ஞானத்திற்கும் மேல் அதிகமான காரியங்களைச் செய்ய தேவனால் கூடும். ஏனெனில் மனித மூளையின் செயல்பாடு ஒரு **"வரையறைக்குட்பட்டதே."** ஆனால் தேவனானவரின் வல்லமை **"வரையறைக்குட்படுத்த முடியாதது."** எல்லையற்றது.

தேவ பிள்ளைகளே! **"தேவனின் கசையடிகளால் நமக்கு சுகம் கிடைத்துள்ளது"** என்றும் **"தேவன் உன்னனுடைய அக்கிரமங்களை மன்னிக்கின்றார்"** என்றும் எழுதப்பட்டுள்ளது. தேவனின் அனைத்து வசனங்களும் **"உண்மையானவைகள்."** வசனங்களை **"விசுவாசிக்கிறவன்."** **"ஆசீர்வதிக்கப்பட்டவன்."** ஆகையால் நீங்கள் தேவனின் **"வசனங்களை"** உறுதியாக பற்றிக் கொண்டு **"விசுவாசம்"** கொள்ளுங்கள். நீங்கள் தேவனை **"விசுவாசிப்பீர்களாயின்"** உங்கள் **"முழு இருதயத்தோடும்"** தேவனைத் **"தேடுவீர்களாயின்"** உங்களுக்கு **"எந்தவொரு நன்மையும்"** குறைவுபடாது. ஆனாலும் நீங்கள் தேவனின் **"பிள்ளையாக"** இருந்தும் இன்றைய நாளில் **"நோயாளியாக படுக்கையிலே விழுந்து கிடக்கிறவராக"** இருக்கின்றீர்களா? ஆனாலும் நீங்கள் **"உங்களை"** சிறிது **"ஆராய்ந்து"** பாருங்கள். உங்கள் உள்ளத்தை நீங்கள் **"சோதித்து"** அறிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் தேவனுக்கு முன்பாக உண்மையானவராக வாழ்வீர்களெனின் உண்மையான மனச்சாட்சியுடன் வாழ்வீர்களாயின். நீங்கள் நீதிமானாக இருப்பீர்களாயின் **"நோய்களினால்"** வாதைகளினால வேதனைப்பட **"மாட்டீர்கள்"** ஏனென்றால் உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து அவர் சத்தத்திற்கு செவி கொடுத்து அவரைப் பற்றிக் கொள்வாயாக! **"அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர், என உபாகமம் 30:20"** இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்கள் **"உள்ளத்தை"** ஆராய்ந்து தேவ **"சத்தத்திற்கு"** கீழ்படியாத சந்தர்ப்பங்களிருப்பின், நீங்கள் **"மனந்திரும்பி"** தேவனிடம் **"மன்னிப்பை"** பெற்றுக் கொள்ளுங்கள்.

தேவ பிள்ளைகளே! தேவன் உங்களுக்கு **"மன்னிப்பு"** கொடுத்து **"வியாதிப் படுக்கையினின்று மீட்டுக் கொள்வாராக!"** நீங்கள் இன்னுமொரு ஆத்மீக பிள்ளையிடம் **"மத்தியஸ்தம் ஜெபத்தில்"** விண்ணப்பப் பண்ணும் போது அவரது **"குரலுக்கு"** **"இரக்கப்பட்டு"** உங்களது அனைத்து பாவங்களையும் **"மன்னித்து"** **"வியாதிப் படுக்கையில்"** உங்களை **"எழுப்புவாராக".** **"விசுவாசமான ஜெபத்திற்கு"** தேவன் **"பதில்"** கொடுப்பாராக. **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! வியாதிப்படுக்கையில் எம்மை சுமக்கும் தேவன் நீரே! தேவனே நான் வியாதியானவனாக மாறியது என்னுடைய அக்கிரமங்கள், பாவங்களினாலேயேயாகும். என்னை மன்னித்து குணமாக்குங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்." (எபிரெயர் 10:17)

ஜீவ மன்னா
செப்டெம்பர் திங்கள் 16

# நீங்கள் வெட்கப்பட்டு போகாதபடி துணை புரியும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ரூத்
அதி: 03 – 04

**"...என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை."**
(யோவேல் 2:27)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! பூமியெங்கும் மேன்மையுள்ளதான இயேசு கிறிஸ்து என்னும் உயிருள்ள நாமத்தில் இன்று **"சகல செல்வங்களையும் பெற்று வாழ"** வாழ்த்துகின்றேன். **"உத்தமனும்," "நல்ல மனிதனாக"** வாழும் மனிதன். எப்போதும் இந்த மனித சமூகம் மத்தியில் **"கௌரவமாக"** இருக்கவே **"பிரியப்படுவான்."** இன்றைய **"ஜீவ மன்னா"** தினச் செய்தியை வாசிக்கும் நீங்களும் அப்படிப்பட்டவராக இருக்கலாம். ஆயினும் சில வேளைகளில் உங்களைப் பற்றி **"பொய்யான பிரசாரங்களைச்"** செய்து அவதூறுகளை சொல்லி உங்களை **"அவமானப்படுத்தும்"** கிரியைகள் உங்களை விரும்பாத ஒரு மனிதன் மூலமாக நடக்கலாம். ஆயினும் உங்கள் **"இருதயம் கலங்காதிருப்பதாக."**

தேவனுடைய பிள்ளைகளே! இன்றைய தேவ வார்த்தை **யோவேல் 2:27**இல் **"என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை."** என்று கூறுகிறார். அவர் கூறும் இவ் **"வார்த்தைகளை"** முழு உள்ளத்தோடு **"விசுவாசியுங்கள்."** இப்போதும் யாருக்காவது நீங்கள் **"பொருத்தனை செய்து"** அதை நிறைவேற்ற முடியாது தவிக்கிறீர்களா? அல்லது ஒரு பணத்தொகையை தருவதாக வாக்கு கொடுத்து அதை கொடுக்க முடியவில்லையா? வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க முடியாது தடுமாறிக் கொண்டிருக்கிறீர்களா? ஒரு பிரபலமான நபர் மூலமாக உங்கள் காரியத்திற்கு நான் மேன்மைப் படுத்த உங்களை அழைத்துச் செல்கின்றேன் என்ற கூறி அதை **"செய்ய முடியாத நிலமை"** உருவாகியதா?. உங்களை குறித்து **"குற்றம்"** கூறி **"அவமானப்படுத்தக் கூடிய"** வார்த்தைகளை பேசும்படி நேர்ந்து விட்டதா? **"நீங்கள் வெட்கப்பட்டு போகும் சூழ்நிலை உருவாகி விட்டதே"** என பயப்படுகிறீர்களா? இது போன்ற எந்த அவமானமான நிலமை ஏற்பட்ட போதும் நீங்கள் **"தளராதிருங்கள்."** தேவ சந்நிதானத்தில் எல்லா காரியங்களையும் **"ஒப்புவித்து" "ஜெபியுங்கள்."** உங்கள் **"இக்கட்டான நிலமையை"** அவருக்கு **"கூறுங்கள்."**

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவனானவர் உங்கள் **"உள்ளத்தை"** காண்கிறார் நீங்கள் **"உண்மையுள்ளவர்"** என்றும் உள்ளத்தில் **"கபடான"** காரியங்கள் இல்லை என அறியும் அவர் யாரையும் குறை கூறவோ, **"வெட்கப்படுத்தவோ"** விடாதபடி மனிதர்கள் மூலமாக சந்தர்ப்ப சூழ்நிலைகளை மாறச் செய்து **"வேறு வழிகளை"** தோன்றச் செய்வார். மனிதர்கள் திட்டமிட்டு **"வெட்கப்படுத்த"** நினைக்கும் சகல கிரியைகளையும் அவர் **"விருதாவாகமாறச்"** செய்வார். நீங்கள் அவருக்குரியவர்களாக இருப்பதால் **"இன்று வெற்றியின் நாள்."**

ஜெபம்

என் நேச தகப்பனே! என் உண்மையான நிலமையை அறிபவரே. நீங்கள் நான் வெட்கப்பட்டு போகாதபடி என்னை காக்க வல்லவரே என் எல்லா சூழ்நிலைகளிலும் உங்களை நோக்கிய வண்ணமாக இருந்து உங்கள் அநுகிரகத்தைப் பெற்றுக் கொள்ள கிருபை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய்." (ஏசாயா 54:4)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 17
செவ்வாய்

# நீதிமான் கர்த்தரால் சோதித்தறியப்படுகிறான்!

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 01 – 02

**"நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்."** (ஏசாயா 11:5)

தேவ குமாரன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் மிக அலங்காரமாக காட்சியளிக்கும் **இந்த காலைப் பொழுதினிலே நலம் பெற்று வாழ** வாழ்த்துகிறேன். பிரியமானவர்களே! உங்கள் ஆத்மீக நிலை தற்போது காணப்படும் வளர்ச்சியைக் காட்டிலும் கனபரிமான வளர்ச்சியைப் பெற்று தேவ **"அன்பிலும், ஆவியிலும்"** இன்றும் **"பெருகத்தக்கதான"** ஆற்றலை பெறும்படியாக பிரார்த்திக்கின்றேன்.

தேவ பிள்ளைகளே! **"திரளான ஜாதிகளின் தகப்பனாக"** ஏற்படுத்தப்பட்ட **"ஆபிரகாம்"** மிக **"விசுவாசத்தோடு"** கர்த்தரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆகையால் அவன் **"உத்தமனாக"** கருதப்பட்டான். அதுபோல் மரணத்தை ஜெயம் கொண்டு மரித்தோர் மத்தியிலிருந்து **"உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்"** நாங்களும் **"நீதிமான்களாக"** உத்தமர்களாக எண்ணப்படுவோம். **"பாக்கியவான்களாக"** மாறும்படியாக **"வரப்பிரசாதம்"** பெற்றவர்களாகிய நானும் நீங்களும் **"பாக்கியவான்கள்."** ஆகையால் இன்றைய நாளில் கடவுள் உங்களுக்கு அறிவிக்கும் விஷேச செய்தி **"கர்த்தர் நீதிமானை சோதித்தறிகிறார்"** என்பதே. கடவுள் **"ஆபிரகாமை சோதித்ததை ஆதியாகமம் 22ம் அதிகாரத்தில்"** காணலாம். எம் கர்த்தர் **"நூறு வயதை தாண்டிய"** ஆபிரகாமின் சந்ததியை பெருகச் செய்யும் நோக்கத்தோடு **"ஈசாக்கை"** வயோதிபப் பருவத்தில் கொடுத்தார். அவன் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடையும் போது அவனை **"மோரியா"** என்னும் மலையில் **"தகனப்பலியாக பலியிடுமாறு கட்டளையிட்டார்."** ஆகையால் நீங்களும் நானும் அவருக்கு முன்பாக **"நீதிமான்களாக"** வாழ்ந்தாலும் நாம் எவ்வளவாய் தேவன் மீது **"அன்பு"** கொண்டுள்ளோம். **"நீதிமான்களாக"** நிலைத்திருக்கிறோமா? என எம்மை ஆராய்ந்தறியும்படி **"சோதிக்கிறவராய்"** இருக்கிறார்.

உங்கள் மனசாட்சியின்படி சகலவற்றிலும் சன்மார்க்கத்தை கடைப்பிடித்து கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கும் நீங்கள் **"பயப்பட"** வேண்டாம். தேவன் புடமிடும்படியாய் **"சோதனைகள்"** அனுமதிக்கும் போது ஆத்துமா பலத்தோடு **"ஜெபத்தில்"** தரித்திருங்கள் "நீதிமான்களுக்கு துன்பங்கள் அநேகம்." என வசனம் வெளிப்படுத்துவதால் உங்கள் வாழ்க்கையில் வேதனைகள் பிரச்சினைகள் வரும்போது **"நான் பாவம் செய்து விட்டேனோ"** என எண்ணாதிருங்கள். இச்சந்தர்ப்பங்களில் அவர் **"பரீட்சித்துப்"** பார்க்கிற வேளைகளாக இருக்கலாம். ஆகையால் **"ஆபிரகாமைப்போல்" "விசுவாசத்தோடு"** அவருக்கு கீழ்படிந்து **"பரீட்சையில்"** ஜெயம் பெற்று பெரிய ஆசீர்வாதங்களை **"உரிமையாக்கிக்"** கொள்ளுங்கள். **ஜெயம் தரும் நாளை பெற்று மகிழுங்கள்!**

ஜெபம்

மகிமையும் மகத்துவமும் மிக்க என் பரலோக தகப்பனே! நீதிமான்களை சோதித்தறியும் தெய்வமே! என்னை நீங்கள் சோதித்தறியும் வேளைகளில், சோர்ந்து போகாதபடி ஆவியில் பெலப்படுத்தி உங்களை விசுவாசத்தோடு நோக்கிப் பார்த்து வெற்றியைப் பெற்றுக் கொள்ள தயை கூர்ந்தருளுங்கள். இயேசுவின் நாமத்தில்.–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூறுகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்."
(உபகாமம் 13:3)

ஜீவ மன்னா
செப்டெம்பர் **18**
புதன்

## தம்மைத் தேடுகிறவர்களை கைவிடாத தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 03 – 04

**“கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.”** (சங்கீதம் 9:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **“இன்று உங்களுக்கு அளவற்ற சந்தோஷத்தால் நிரம்பிய சுபமான நாளாக வேண்டுமென”** பிரார்த்திக்கின்றேன். இன்றும் **“24 மணித்தியாலமும் தேவன் உங்களோடு”** இருப்பாராக! ஏனென்றால் தேவன் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் இறுதிவரை உங்களை முன்னோக்கிக் கொண்டு செல்ல உங்களிடம் **“பொருத்தனை”** பண்ணியிருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! அதிகாலையில் நீங்கள் தேவனின் பாதத்திலமர்ந்து ஜெபித்தீர்களா? உங்கள் **“ஜெபநேரத்தை”** சரியாக **“முழு மனதோடும்”** தேவனுக்கு அர்ப்பணித்து செலவு செய்ய முடியாமல் உங்கள் **“உள்ளம்”** துன்பத்தோடு இருக்கின்றதா? உங்கள் ஜெபக் **“கோரிக்கைகளை”** பிதாவானவருக்கு ஏறெடுக்க முடியாத வண்ணம் உங்கள் உள்ளத்தில் அநேக “நினைவலைகள்” போராடுகிறதா? வெகு காலங்களாக உங்களால் தீர்த்துக்கொள்ள முடியாத **“சிக்கல்கள்”** இருக்கின்றபடியால் நீங்கள் மனம் உடைந்து குழப்பத்திற்குள்ளாகி உங்கள் **“ஆத்துமாவானது”** பின்மாற்றமாகி இருக்கின்றதா? ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள். இன்றைய நாளிலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் கூறுகிறதாவது **“நீங்கள் கர்த்தரைத் தேடுகிறபடியால் அவர் உங்களைக் கை விடுவதில்லை என்றாகும்.” சங்கீதம் 9:10** பிரதான வேதாகம வசனத்தில் எழுதியுள்ளதாவது **“உம் நாமத்தை அறிந்தவர்கள் உம்மை விசுவாசிக்கின்றவர்கள், உம்மையே நம்பியிருக்கின்றவர்களை உம்மைத் தேடுகிறவர்களை நீர் ஒரு போதும் கைவிடுகிறதில்லை”** என்றாகும். தேவ பிள்ளைகளே! தினமும் **“சூரியன் உதயமாவதும்,”** மீண்டும் **“சூரியன் மறைவதும்”** குறித்து நீங்கள் அறிவீர்கள். அப்படியே மிகப் பெரிதான வெளிச்சத்தினை உடைய **“சூரியனைப்”** படைத்து வானத்தில் வைத்து **“தனது”** செயல்களை **“நியமித்தது”** உங்கள் சிருஷ்டிகராகிய தேவனே. தேவனின் செயல்களை யாராலும் **“மாற்ற முடியாது”**

தேவ பிள்ளைகளே! **“சூரியனுக்கு”** மேலாக அதன் **“செயல்பாடுகளை நியமித்தது”** உங்கள் தேவனாகையால் அவரை உங்களால் முழு மனதோடு விசுவாசிக்க முடியும். அவர் வாயிலிருந்து வெளிப்படுத்துகின்ற **“வசனங்கள்”** ஒரு போதும் **“வெறுமையாகத்”** திரும்புவதில்லை என பரிசுத்த வேதாகமத்தில் **ஏசாயா 55:11**இல் காண்கிறோம். ஆகையால் ஒவ்வொரு நாளும் தேவனின் **“முகத்தை”** தேடுவதில் உற்சாகமாயிருங்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வேளையிலும் தேவனை **“விசுவாசித்து,”** அவரைத் தேடுவீர்களாயின் தேவன் ஒரு நாளும் உங்களைக் **“கைவிடமாட்டார்.” இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்களைத் தேடுபவர்களை நீர் ஒரு போதும் கைவிடுகிறதில்லை என விசுவாசிக்கிறேன். என்னை எல்லா வேளையிலும் உம்மைத் தேட தயை செய்யுங்கள். நான் உங்களின்று தூரமாகி போய் விடாதபடி என்னைக் காத்துக் கொள்ளுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அவன் வெளியே ஆசாவுக்கு எதிர்கொண்டுபோய், அவனை நோக்கி: ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்.” ( 2 நாளாகமம் 15:2)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 19
வியாழன்

# தீராத வியாதி படுக்கையிலும் நீதிமானை எழுப்புகின்ற தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல்
அதி: 05 – 06

**"தீராவியாதி அவனைப் பிடித்துக் கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள்."** (சங்கீதம் 41:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு **"சுப நாளாகட்டும்"** என பிரார்த்திக்கின்றேன். உலகில் வாழ்கின்ற அனைத்து **"மனிதர்களையும்"** எமக்கு **"புரிந்துக் கொள்ள"** முடியாத நிலையில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம், ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு கொள்கைகளோடு **"பாகுபாடுகளோடு,"** ஒவ்வொரு கட்சிகளாக இயங்கிக் கொண்டிருப்பதை **"பெரும்பாலும்"** காண முடிகிறது. ஆனாலும் நீங்கள் மனங்கலங்காதிருங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் அநாதி சிநேகத்தினால் உங்களை அழைத்து அவர் **"உண்மையான"** உள்ளத்தோடு **"நேசிக்கின்றார்."** அவர் துன்பத்திலும், இன்பத்திலும் உங்கள் **"அருகிலேயே"** இருப்பார்.

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 41:8**இல் **"தீராத வியாதி ஏற்பட்டுள்ளது. படுக்கையில் முடங்கிக் கிடக்கும் அவன் மீண்டும் எழும்பப் போவதில்லை என்கிறார்கள்"** என்று எழுதப்பட்டுள்ளது. அங்கே **"மனிதனானவன் உங்களைப் பற்றி அவ்வாறு தீங்கானவைகளைப் பேசுகிறான்"** என்றும் கூறப்படுகின்றது. ஆனாலும் தைரியமாயிருங்கள். நீங்கள் **"நீதிமானாய்"** இருந்தால் மனிதன் கூறும் வசனங்களுக்கூடாக உங்களுக்கு எந்த விதமான பாதிப்பும், அழிவும் உங்களை அணுகுவதில்லை. நெருங்கவும் இயலாது. ஏனென்றால் **"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்"** என்று **சங்கீதம் 34:19**இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் நீங்கள் **"நீதிமானாக"** வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் மனிதரையல்ல. உங்கள் தேவனை மாத்திரம் **"விசுவாசத்தோடு"** கண்ணோக்குங்கள். தூய எண்ணங்களை உடைய மனிதன் தன்னுடைய **"நற்காரியங்களால்"** தன்னை வெளிப்படுத்துவதையும், **"தீய எண்ணங்களோடு"** வாழும் மனிதன் தனது **"தீங்கான"** செயல்களினால் தன்னை மானிடருக்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பான் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒரு மரத்தின் கனிகளைக் கொண்டே அம்மரத்தை அளவிட முடியும்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் தினமும் **"இடைவிடாது"** உங்கள் தேவனின் பொற்பாதத்திலமர்ந்து **"ஜெபம்"** செய்யுங்கள். நீங்கள் **"சரீரத்தில்"** விழவில்லையானாலும், **"ஆத்மீகமாக"** நீங்கள் விழுந்திருக்கக் கூடும், உங்கள் விசுவாசத்தினால் நீங்கள் **"கீழே"** விழுந்திருக்க முடியும். ஆனாலும் உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து ஜெபம் பண்ணுவீர்களாயின் **"விழுந்து உடைந்து போன"** உங்கள் **"விசுவாசத்தை" "மீண்டுமாக கட்டியெழுப்பி"** உங்கள் ஆத்துமா எந்த இடத்திலே **"பின்மாற்றத்திற்குள்ளாகியதோ"** அதே இடத்தில் மீண்டுமாக **"எழுப்ப"** வல்லவரான இயேசுகிறிஸ்து உங்களோடு இன்றும் ஜீவிக்கின்றவராக இருக்கின்றார். **"வெற்றிகரமான நாள்."**

**ஜெபம்**

என் பிதாவே! நாம் விழுந்தாலும் மீண்டுமாக எம்மை எழுப்பும் தேவன் நீரே. மனுஷன் அவனது வசனங்களில் எம்மை ஆத்துமாவில் பின் மாற்றமாக்க முயற்சி செய்வான். ஆனால் நீங்கள் எங்கள் ஆத்துமாவை பெலப்படுத்தி தைரியப்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்." (நீதிமொழிகள் 24:16)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 20

வெள்ளி

# கோபம் நீக்கி சிட்சிப்பை மாற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

1 சாமுவேல் அதி: 07 – 08

**"...என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று."** (ஓசியா 14:4)

கர்த்தருக்குள் பிரியமான என் தேவ ஜனங்களே! வழியும் துணையுமான உயிருள்ள தேவனின் திரு நாமத்தால் **"இன்றைய நாள் சமாதானத்தின் நாளாக அமையும்படி"** ஆசீர்வதிக்கிறேன். **"சமாதானத்தின் தேவன் தாமே இவ்வுலகில்"** இறங்கி வந்து அவருடைய **"சமாதானத்தை"** எமக்கு அருளினபடியால் நாம் **"பாக்கியவான்கள்."** ஆகையால் **"கலங்காமலும் பயப்படாமலும்"** இருங்கள்.

தேவ பிள்ளைகளே! கர்த்தர் **"கோபம்"** கொள்ளும் **"தேவனாயிருக்கிறார்."** ஏனெனில் தம்முடைய **"பிள்ளைகள்"** தவறான வழிகளில் நடக்கும் போதும், துஷ்டகிரியைகள் செய்யும் போதும் சொன்னதை கேட்காத கீழ்படியாத முரட்டாட்டம் உள்ளவர்கள் இருக்கும் போதும், பெற்றோர் கோபப்படுகிறவர்களாய் அவர்களை **"கண்டித்தும்" "தண்டித்தும்"** கடிந்துக் கொள்கிறவர்களாய் இருப்பதில்லையா? அதே போல் எம்மை **"படைத்தவர்"** எம்மீது அளவுக்கு மீறின **"அன்பு"** கொண்டவர். அவருக்கு கீழ்படியாது பாவம் செய்யும் போது அவருடைய வார்த்தையை மீறி நடக்கும் போது அவருடைய சொல்லைக் கேளாது தீமையான துன்மார்க்க நிறைந்த காரியங்களை செய்யும் போது அவருடைய வழிகளை விட்டு, அவருடைய அன்பின் உறவை பிரிந்து தூரமாய் விலகி போகும் போது எம் மீது **"கோபம்"** கொள்ளாமல் இருப்பது எப்படி? அவருடைய **"அன்பின்"** நிமித்தமாக அவருடைய உள்ளத்தில் **"வேதனை"** ஏற்படுகிறது. எம் **"அழிவை"**, காண முடியாத அவரது இருதயம் எம் மீது **"கோபம்"** கொள்கிறது. அவருடைய தண்டனை எமக்கு கொடுத்து எம் பிழைகளை உணர்த்தி மறுபடியும் எம்மை **"சீர்படுத்தும்படியாய்"** எம்மை நோக்கிக் கொண்டிருக்கிறார்.

அவருடைய இந்த **"தண்டனை"** எனப்படும் சிட்சிப்பு **"மிக சிறிய காலமே."** ஏனெனில் அவர் தமது **"கோபத்தின் நிமித்தமாக"** எம்மை சிட்சித்து, **"தண்டித்து"** எம்மை **"நிர்மூலப்படுத்தும்படியாக அல்ல"** எம்மீது அவர் கொண்ட **"மாறாத பேரன்பினால்"** எம்மை **"நல்வழிப்படுத்தி"** பிழைகளை விட்டு **"விலக்கவே". "பாவிகள் தங்கள் பாவவழிகளை விட்டு மனந்திரும்ப வேண்டும் என்பதே என் விருப்பம்"** என்றவர், அவருடைய பிள்ளைகளாகிய எங்களைக் குறித்து எவ்வளவு அக்கறை உள்ளவராய் இருக்கிறார் என்பதை சிந்தியுங்கள். நாங்கள் தண்டனையடையும் போது, அடி வாங்கும் சந்தர்ப்பங்களில் மனவேதனை அடையும்வண்ணமாக வார்த்தைகளால் பேசும் பொழுது அவைகளை கேட்டு அவமானப்படுகின்ற வேளையில் எம் உள்ளம் எவ்வளவு **"வேதனைப்படுகிறது."** நாங்கள் எம் பிழைகளை உணர்ந்து **"மனஸ்தாபப்பட்டு"** மனந்திருந்தி மன்னிப்பு கேட்கும் போது, அவர் தமது **"சிட்சிப்பை" "மாற்றி"** எம்மை **"ஆறுதல்படுத்தி," "பின்மாற்றங்களை"** சரிசெய்து முழு விருப்பத்துடன் நேசிப்பார். இதை **ஓசியா 14:4**இன் வசனத்தை நாம் வாசிக்கலாம். **இன்று வெற்றியின் நல்லநாள்!**

ஜெபம்

எப்போதும் எம்மை விட்டு தூரமாய் விலகிப் போகாதவரும். எம்மை சிட்சித்து நல்வழிப்படுத்துவருமான எங்கள் அன்புத்தகப்பனே! என் வாழ்க்கை தடம்புரண்டு போகும் வேளைகளில் உங்கள் சிட்சிப்பைக் கொண்டு உணரச் செய்து என்னை உங்கள் அன்பினால் நிரப்புங்கள். உங்களை கோபப்படுத்தாதபடி உங்கள் கிருபையால் என்னை நடத்துங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்." (ஏசாயா 54:8)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 21
சனி

# ஜீவ கிரீடத்தை முடிசூட்ட எங்களைத் தெரிந்துக் கொண்ட தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 09 – 10

**"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு."**
(வெளி: 3:11)

தேவன் தெரிந்துக் கொண்ட தேவ பிள்ளைகளே! நிகரில்லாதவரும் எம்மீது அளவில்லா அன்புக் கொண்டவருமான இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் சுகமான **"ஜெயம் கொண்ட நாளை பெற்று வாழ"** வாழ்த்துகிறேன். எமது **"ஜீவனை"** குறித்தும், **"ஆத்துமாவைக்"** குறித்தும் நாங்கள் அறிந்துக் கொண்டவைகளைக் காட்டிலும், அறியாதவைகள் அநேகம். அறியாத ஆத்துமீக காரியங்களை குறித்து தெரிந்துக் கொள்ளும்படியாக **"ஜீவ மன்னா சஞ்சிகையை வாசித்து நாள்தோறும்"** புதிய காரியங்களை கற்று உணர்ந்து ஆவியிலே பெலப்படும் நீங்களனைவரும் **"பாக்கியவான்கள்."**

பிரியமானவர்களே! இப் பிரபஞ்சத்தின் **"ஞானம்," "அறிவு,"** அநுபவங்களை நாம் பெருமளவில் பெற்றிருந்தாலும் ஆத்மீக அறிவு, ஞானம் எமக்கிராவிட்டால் அநேகமான, வெவ்வேறு விதமான பிரச்சினைகளுக்கு உட்பட்டு அவற்றால் ஏற்படும் காரியங்களில் அகப்பட்டு எம் வாழ்க்கை **"சீர்கேடுகளை"** சந்திக்க நேரிடலாம், **"என் ஜனங்கள் அறியாமையால் அழிகிறார்கள்"** என்று தேவனுடைய வசனம் கூறுகிறது. **"உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!"** இன்றைய தின ஆரம்ப வசனம் **வெளிப்படுத்தல் 3:11இல் "இதோ சீக்கிரமாய் வருகிறேன்." "ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு."** என்கிறது. இதை வாசிக்கும் நீங்கள் **"அரசர்களுக்கே" "கிரீடம்"** சூட்டுவார்கள். நாங்கள் **"மன்னர்கள்"** அல்லவே, நாங்கள் எப்படி ராஜகிரீடம் சூட்டுபவர்களாக மாற கூடும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆயினும் கவலைப்படாதீர்கள். வேதாகமத்தில் **"ஏசாயா"** என்னும் **புத்தகத்தில் 43:15** கர்த்தர் எங்களுக்கு கூறுகிறார். **"நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும் இஸ்ரவேலின் சிருஷ்டிகரும் ராஜாவுமானவர்"** என்று ஆகையால் நாங்கள் அவருடைய **"உரிமையுள்ள பிள்ளைகளாய்"** இருப்பதால் நாங்களும் **"ராஜரீக வம்சமாயிருக்கிறோம்."** ஆயினும் நாங்கள் **"கிரீடத்தை"** பெற்றுக் கொள்ளும்படியாய் **"உத்தமர்களாய்"** சத்தியத்தின் பாதையில் **"கடைசிவரையில்"** ஓடி கடக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். எங்களுக்காக **"ராஜகிரீடம்" "பரலோகத்தில்"** வாசம் பண்ணும் எமது **"பிதாவிடமே"** இருக்கிறது.

உலகத்தில் ஜீவிக்கும் நீங்கள் தற்போது **"துன்பப்படுகிறவராய்"** இருப்பதாலும் **"வேதனைகள்"** மத்தியில் ஜீவிப்பவராய் இருப்பதாலும் **"பரலோக கிரீடம்"** எனக்கெதற்கு என எண்ணக் கூடும். ஆயினும் **"பரலோகத்திற்கு முடி சூடுவதற்கு"** பேறு பெற்றவர்களாக எம்மை தெரிந்துக் கொண்டார். **"தேவ நாமத்தை"** மகிமைப்படுத்தவும் பூமியிலிருப்பவர்கள் **"அவர் நாமத்தை"** அறிந்துக் கொள்ளும்படியும் லௌகீக **"ஆசீர்வாதங்களை"** எமக்களித்து எம்மை **"உயர்த்துவார்." ஜெயம் பெற்றவர்களாக இருப்போம்!**

ஜெபம்

என்னை நேசிக்கும் அன்புத் தகப்பனே! கிரீடம் சூடும்படியாய் என்னை தெரிந்துக் கொண்டவரே! ஸ்தோத்திரம். உலக ஆசீர்வாதங்களுக்கூடாக என்னை ஆசீர்வதித்து உயர்த்தி கௌரவப்படுத்தும் அன்புக்காக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." (வெளி: 3:21)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 22
ஞாயிறு

## உங்கள் நுகத்தடியை அடியோடு முறித்துப் போடும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 11 – 12

**"...அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின்மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர்."** (ஏசாயா 9:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **"இன்றைய நாள் வெற்றிச் சிறந்த சமாதானத்தின் நாளாக வேண்டுமென"** வாழ்த்துகின்றேன். இன்றைய நாளிலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கூறுவது **"தேவன் உங்களுக்கு சுமையான நுகத்தடியையும், உங்கள் தோளிலிருந்த மிலாற்றையும், உபத்திரவத்திற்கு காரணமான கோலையும் நான் முறித்துப் போடுவேன்"** என்றாகும், **"ஆகையால் நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள்."**

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளின் இந்த **"தேவ செய்தியை"** வாசிக்கின்ற உங்களது வாழ்க்கையில் உங்களுக்கு இன்னுமாக தீர்த்துக் கொள்ள முடியாமலிருக்கின்ற குடும்பத்தின் பிரச்சினை, பொருளாதார பிரச்சினை, தொழில் பிரச்சினை, கைவிட முடியாத பாவங்கள், ஏதோ ஒன்றுக்கு அடிமையாகுதல் உங்களின் பலவீனங்கள், அல்லது குறைபாடுகள் இருக்கலாம். இவைகள் உங்கள் வாழ்க்கையில் உள்ள **"நுகத்தடிகளாக"** இருக்கலாம். இவைகள் அனைத்தும் தோளில் **"மிலாற்றில் இறுகக்கட்டப்பட்டவைகளாக"** இருக்கலாம். ஆனாலும் **"உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!"** உங்கள் வாழ்க்கையில் இருக்கும் எல்லா விதமான **"நுகத்தடிகளையும்"** முறித்து உங்களை அனைத்திலும் **"விடுதலை"** பெறச் செய்ய உங்கள் தேவனானவர் **"வல்லமையுள்ளவராக"** இருக்கின்றார். உங்களைப் பெயர்ச் சொல்லி தன்னிடம் கிட்டிச் சேர்த்து உங்களை **"அழைத்த"** உங்கள் தேவன் உங்களை ஒரு போதும் **"புறம்பே"** தள்ளவும் **"கைவிடவும்"** மாட்டார். உங்களைத் தேர்ந்தெடுத்தது **"உங்கள் சுபாவம் எப்படிப்பட்டது"** என நன்கு அறிந்தேயாகும். ஆகையால் மனிதர்கள் உங்களை கீழாக்கி வைத்தார்களா? உங்களை வேண்டாமென்று மனிதர்களின் மூலம் நீங்கள் தாழ்த்தப்பட்டீர்களா? உங்களை புறம்பே தள்ளி ஒதுக்கினார்களா? உங்களை அவமானப்படுத்தி, குற்றப்படுத்தி உங்களை வெட்கத்திற்குள்ளாக்க செயல்பட்டார்களா? நீங்கள் **"அதைரியப்படாதீர்கள்." "கவலைப்படாதீர்கள்."**

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவனானவர் **"ஜீவிக்கின்றவராக"** எங்கள் மத்தியில் இருக்கின்றார். தேவன் தேவ ஆவியானவரை **"உங்களுக்குள்"** வைத்து, தேவன் உங்கள் ஆத்துமாவை பெலப்படுத்தி, வல்லமைப்படுத்தி உங்கள் வாழ்க்கையில் இருக்கும் எல்லாத் தடைகள், கட்டுகள், அனைத்தையும் தேவன் "முறித்துப்" போடுவார். நீங்கள் தேவனின் பாதத்திலிருந்து **"ஜெபம்"** செய்யுங்கள். தேவன் தேவ ஆவியில் **"வல்லமையில்"** பரிபூரணப்படுங்கள். உங்களுக்கு **"சத்துரு"** வைக்கும் சகல **"நுகத்தடிகளையும்"** தேவன் "முறித்துப்" போட்டு உங்களை **"விடுவிப்பாராக"**. உங்களைக் குறித்து தேவன் வைத்திருக்கும் **"இரக்கமோ"** மிக விசாலமானது. **இன்று வெற்றிகரமான நாள்!**



ஜெபம்

என் தேவனே! நீங்கள் வல்லமை உடையவர். உங்கள் பரிசுத்த தேவ ஆவியானவரை எனக்குள் வைத்து நீங்கள் என்னை பெலப்படுத்தி என் நுகத்தடிகளை முறித்துப் போடுங்கள்.

இயேசுவின் நாமத்தில்.-ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்; அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம்." (ஏசாயா 10:27 )

ஜீவ மன்னா

செப்டெம்பர் 23 திங்கள்

## உங்கள் கூக்குரலை கேட்டு உங்களண்டையில் வரும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 13 – 14

**"நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார்."** (ஆதியாகமம் 18:21)

ஜீவனுண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்த, சர்வ வல்லவரின் ஜீவனுள்ள நாமத்தினால் அன்புக்குரியவர்களே! உங்களை இன்றும் நல்லாசிகளுடன் கூடிய **"நன்மையான நாளை"** பெற்று மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன். தேவனுடைய **"பிள்ளைகளாக"** உலக மனிதர்கள் மத்தியிலிருந்து தெரிந்துக் கொள்ளப்பட்டு வேறுபிரிக்கப்பட்டு, நாள்தோறும் **"தேவ வார்த்தைகளைத் தியானிக்கவும்"** ஜெபிக்கவும், துதிக்கவும், இந்த **"ஜீவ மன்னா சஞ்சிகையை"** வாசித்து "வார்த்தைகளில்" பெலப்படும் நீங்கள் **"ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்"** **"ஏனெனில் வார்த்தைகள் மூலம் ஜீவனும் சரீர சௌக்கியமும் ஆசீர்வாதமும் வந்தடைகிறது"** என எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் ஆத்துமா **"நித்திய ஜீவனை"** பெற்றுக்கொள்ளும்படியும் **"சரீர சுக பெலத்துடன்"** இருக்கும்படியும் **"நாள்தோறும்"** வேத வசனங்களை வாசித்து விட்டு அவைகளை இருதயத்தில பதியவைத்து, தியானித்து, அதன்படி வாழ்வை **"நடத்திச் செல்லுங்கள். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!"** இன்றைய நாளில் **ஆதியாகமம் 18:21**இல் தேவனுடைய வசனம் கூறுகிறது அவர் **"கூக்குரலைக்கேட்டு" உங்களுக்குச் "சமீபமாக வருகிறார்"** என்பதாக. அதுமட்டுமல்ல அவர்கள் என்னிடத்திலே சம்பூரணமாக கூக்குரலிட்டு கதறுகிறார்களோ இல்லையோ என்று நான் பார்த்து அறிவேன். என்று கூறுகிறார். இவ்வசனத்தில் காணப்படும் விஷேசித்த காரியம் **"நான் இறங்கிப்போய்"** என்பதாகும். **"சர்வவல்லமையுள்ள தேவன் உங்கள் கூக்குரலைக்கேட்டு பரலோகத்திலிருந்து இறங்கி புவிக்கு வந்து நீங்கள் இருக்கும் இடத்தை நோக்கி வருகை தருவதாகும்." "படைத்தவர்"** தாம் **"படைத்தவர்கள்"** மேல் எவ்வளவு பிரியம் வைத்துள்ளார் என்பதை நினைத்துப் பாருங்கள்.

தேவனுடைய பிள்ளைகளே! மனிதர்கள் **"அபயமிடுவது"** கூக்குரலிடுவது தாங்க முடியாத துன்பத்தினால், வேதனையினால், ஆபத்துகளினால், மீள முடியாத துயரத்தினாலாகும். இன்று இப்படியான ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறீர்களா? அப்படியாயின் தெய்வத்தின் திருப்பாதத்தில் அமர்ந்து துன்பத்தால், துயரத்தால், சோர்ந்து போன உள்ளத்தை அவர் முன் ஊற்றிவிடுங்கள். உங்கள் இயலாமையை அவரிடம் **"கூறுங்கள்"**. இன்றும் உங்கள் **"அபயக்குரலைக் கேட்பார்."** உங்களுக்கு **"உபகாரம்"** செய்வார். உங்களுக்கு துணைபுரிவார். **இன்று விடுதலையின் வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் அன்பான தேவனே! என் கூக்குரலைக்கேட்பவரே! எனக்கு சகாயம் செய்பவரே! எங்கள் அபயக்குரலைக் கேட்டு எங்களிடம் வந்து எம் குறைநீக்கி, யாவற்றையும் தேடிப்பார்த்து அநுசரனை செய்கிற தகப்பனே உங்களை நன்றியோடு துதிக்கிறேன்.–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு."
(சங்கீதம் 130:7)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 24
செவ்வாய்

## பாவிகளை அதிகமாக நேசிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 15 – 16

**"இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்."** (பரி:மாற்கு 1:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் இன்றும் **"இனிமையான நாளாக வேண்டுமென நான்"** வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன். ஜீவிக்கின்ற எம் படைப்பின் பரலோகப் பிதாவைக் குறித்து தெரிந்து கொண்ட அனைத்து மனிதர்களும் **"மிகவும் அதிர்ஷ்டக்காரர்களென"** நான் உங்களுக்கு உரைக்கிறேன். ஏனென்றால் நாங்கள் பாவங்களைக் குறித்து அறிந்துக் கொண்டுள்ளோம். பாவங்களுக்கு **"தண்டனை"** கிடைக்கின்றதென்பதையும் நாம் அறிந்துள்ளோம். ஆனாலும் நாங்கள் அறிந்தும், அறியாமலும் செய்த அனைத்து பாவங்களுக்கு இப்பொழுது **"பாவமன்னிப்பை"** பெற்றுக் கொண்டுள்ளோம். அப்படி **"அதிர்ஷ்டகரமான"** நிலை உருவாகியது சிருஷ்டித்த தேவ பிதாவானவரின் **"இரக்கமும்"** அளவற்ற அன்பினாலேயாகும்.

தேவ பிள்ளைகளே! **"பாவத்தின் சம்பளம் மரணம்"** என்பதை நாங்கள் அறிந்து கொண்டது தேவன் எமக்குத் தந்த பரிசுத்த வேதாகமத்தினால் ஆகும். தேவனின் ஒரே பேறான **"குமாரன் இயேசுகிறிஸ்து"** எங்களுக்காக சிலுவையில் பாடுகள் அனுபவித்து , சொல்ல முடியாத துன்பங்களை ஏற்று **"பலியாக"** அர்ப்பணித்து **"எங்கள் தண்டனைகளை"** அவர் சுமந்து கொண்டதை **"ஏற்றுக் கொள்ளும் அனைவரையும்"** தமது **"பரிசுத்த இரத்தத்தினால் கழுவி"** அவர்களின் எல்லா **"பாவங்களிலிருந்தும் அவர்களைப் பரிசுத்தப்படுத்துகின்றார்."** தேவனாகிய இயேசுகிறிஸ்து பாவங்கள் எவ்வளவு பயங்கரமானது, என்பதனையும் அதன் **"விளைவுகள்"** எப்படியானது என்பதனையும், மிகவும் நன்றாகத் தெளிவுப்படுத்தியுள்ளார். ஆகையால் **உள்ளம் கலங்காதிருங்கள்!** மேற்குறிப்பிட்ட **பரி:மாற்கு 2:17** பிரதான வேதாகம வசனத்தில் தேவன் எமக்கு கூறுவதாவது **"பிணியாளர்களுக்கே அல்லாது ஆரோக்கியமாக விருப்பவர்களுக்கு வைத்தியம் இல்லை நீதிமான்களையல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்"** என்றாகும். ஆகையால் அனைத்து இலங்கை வாழ் மக்களுக்கிடையில் எங்களைத் தேர்ந்தெடுத்து தேவனே கிட்டிச் சேர்த்து எம்மை அழைத்து அரவணைத்துக் செல்வதால் நாம் **"அதிர்ஷ்டக்காரர்கள்"** ஆவோம்.

தேவ பிள்ளைகளே! தேவ பிதாவானவர் விருப்பத்தின் பேரில் இயேசுகிறிஸ்து எங்களை அவரண்டை அழைத்து **"சகல பாவங்களினின்றும்"** எம்மை **"கழுவி"** பரிசுத்தப்படுத்தினார். ஏனென்றால் நாங்கள் அனைவரும் **"நரகாக்கினைக்கு"** இரையாக நியமிக்கப்பட்டிருந்தோம். இன்றும் **"பாவிகளை"** அதிகமாக நேசிக்கின்ற இயேசுகிறிஸ்து அவர்களை மீட்க **"உயிரோடு ஜீவிக்கின்றவராக"** இருக்கின்றார். நாம் மனம் திரும்பி இயேசுவின் அன்பை இன்றைய நாளிலும் பெற்றுக் கொள்ள முடியும். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் பிதாவே! நீங்கள் பாவிகளை நேசிக்கின்ற தேவனாக இருக்கின்றீர்கள். உங்கள் மகனான இயேசுகிறிஸ்துவுக்கூடாக நீங்கள் பாவத்திலிருந்து மீட்டுக் கொண்டீர்கள். நீங்கள் என்னை உபசரிக்கிறபடியால் ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள்..." (எரேமியா 7:23)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 25 புதன்

# மாமிசத்திற்கும் இரத்தத்திற்கும் பங்காளரான தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 17 – 18

**"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்;..."** (எபிரெயர் 2:14 )

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்று உங்களுக்கு சகலவிதமான **"ஆசீர்வாதங்களிலும் நிரம்பிய நன்நாளாக"** வேண்டும் என நான் வாழ்த்துகின்றேன். தேவன் தேவ வசனமெனும் இரகசியமான **"இடத்திலிருக்கும் புதையலிலிருந்து"** இன்றும் கிரிகையிலே செயல்படுகின்ற ஜீவனைக் கொடுக்கின்ற தேவ வசனங்களைக் குறித்து அறிவைப் பெற்றுக் கொள்ளும் நீங்கள் அனைவரும் **"பாக்கியவான்களும், ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாவீர்கள்."** நீங்கள் அனுதினமும் தேவ வசனத்தை **"வாசித்து,"** அதை உள்ளத்தில் **"தியானித்து,"** அந்த தேவ வசனத்தைக் குறித்து **"ஜெபம் செய்யுங்கள்."** அப்பொழுது உங்கள் தேவனானவர் உங்களோடிணைந்து அநேக **அர்த்தங்களைக் கற்றுக் கொடுப்பாராக!**

தேவ பிள்ளைகளே! தனது பிள்ளையை எந்த மனிதனாவது துன்பப்படுத்தினால், அவமானப்படுத்தினால், குற்றப்படுத்தினால், பெற்றோர்கள் அவன் மீது மிகுந்த கோபம் கொள்வார்கள் அல்லவா? அதிகமான ஆவேசம் கொள்வார்கள் அல்லவா? அவ்வண்ணமே எங்கள் சிருஷ்டிகரான தேவ பிதாவானவர், அவர் **"சிருஷ்டித்த பிள்ளைகளாகிய"** எம்மை சாத்தானாகிய பிசாசு தனது இலக்கில் சிறைப்படுத்தி, எங்களை அதிகமாக உபத்திரவத்திற்குட்படுத்துகிறவனாய், எங்களைத் துன்பப்படுத்துவதைக் கண்டு அவர் **"பரலோக ராஜ்ஜியத்தின் ஒரே பேரான குமாரனாக மனுவுரு"** எடுத்து இவ்வுலகத்திற்கு வந்தருளினார்.மேற்கூறப்பட்ட முக்கிய வேதாகம வசனத்தில் கூறப்படுகின்றதாவது தேவனது பிள்ளைகள் இரத்தம், மாமிசத்திற்கு பங்குகாரர்களாக இருப்பதனால் **"தேவன் அவைகளுக்கு பங்காளியாக கிருபாதாரப் பலியானார். ஆனால் அப்படியாகச் செய்தது மனிதனை மரணத்திற்குட்படுத்தும் வல்லமையுடைய சாத்தானின் மரண வல்லமையை முற்றிலுமாக அகற்றி வாழ்வில் முழுவதும் மரணப்பயத்தை உருவாக்கி அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் சகல காரியங்களிலும் அனைவரையும் விடுதலை கொடுக்கும் படியேயாகும்."** என்று அங்கே எழுதப்பட்டிருக்கின்றது.

தேவ பிள்ளைகளே! உங்களுக்கு உபத்திரவம் உண்டுபண்ணுகின்ற, ஆக்கினை உண்டுபண்ணும் சாத்தானின் செயல்களை **"அழிப்பதற்காக"** உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காக தனது ஜீவனை பலியாக ஒப்புக் கொடுத்தார். நீங்கள் தைரியமாயிருங்கள். தேவனது **"தேவ ஆவியானவரை"** உங்களுக்குள் வைத்து தேவன் தமது **"வல்லமையால்"** உங்கள் ஆத்துமாவை நிரப்பி சாத்தானின் செயல்களினின்று **"வெற்றி"** பெற்றுக் கொள்ள உங்களுக்கு இன்று உதவி செய்வாராக! **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்களுக்காகவும், எனக்காகவும் பரலோக தேவனின் ஒரே பேறான குமாரனாக பூமிக்கு வந்தருளினீர். சாத்தானை தோல்வியடையச் செய்யும் உங்கள் வல்லமையில் என்னை நிரப்புங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்." (1 யோவான் 3:8)

ஜீவ மன்னா

செப்டெம்பர் 26 வியாழன்

## நீ வற்றாத நீரூற்றைப் போல் இருப்பாய் !

இன்றைய வேதவாசிப்பு

1 சாமுவேல் அதி: 19 – 20

**"...நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்."** (ஏசாயா 58:11)

பாசமுள்ள எனக்கருமையான தேவனுடைய பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **"ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் தொடரும்படி"** ஜெபிக்கிறேன். இப் புவிதனில் வாழும் சகல உயிர் உள்ள படைப்புகளினதும் ஒரு பொதுவான குணாதிசயம் **"அன்புக்"** கூறுவதும் அன்புக் கூறப்படுவதை விரும்புவதேயாகும். சிறு குழந்தைகள், பிள்ளைகள், வாலிபர்கள், வயோதிபர்கள். எல்லோருடைய வாழ்விலும் இந்த **"அன்பு"** பொதுவானதாயும் எல்லோருக்கும் தேவைப்படுவதாகவும் இருக்கிறது. **"அன்பே தெய்வம்."** தேவன் **"அன்பின்"** திருஉருவம். தேவனுடைய **"உண்மையான அன்பு"** ஒரு மனிதனின் உள்ளத்தில் இருக்குமானால் மற்றவனுக்கு விரோதமாக வைராக்கியம் இருக்க முடியாது.

தேவ பிள்ளைகளே! இன்றைய தின செய்தியின் பிரதான வசனம் **ஏசாயா 58:11**இல் **"வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய்"** என்பதாகும். வற்றாத நீரூற்றைப் போன்ற ஆசீர்வாதம், உலகின் எந்த தேசமானாலும் பூமி **"நீர்"** இல்லாது **"காய்ந்த"** தரிசு நிலமாக காணப்படின் மனிதாக்ள் வசிக்க முடியாத **"பாழான"** பூமியாக மாறிவிடும். அது **"பாலைவனம்"** என்ற பெயரைப் பெற்று விடும் அதேபோல் **"நீர்நிலைகள்"** நிறைந்த பூமியாக இருப்பின் தாவரங்கள், மரங்கள், பயிர் பச்சிலைகள் நிறைந்த பசுமையான பிரதேசமாக காட்சி அளிக்கும். **"அந்த அழகு நிறைந்த"** வனத்திலே பறவையினங்கள் புல்லினங்கள் வந்து தங்கி இன்னிசை எழுப்பி மகிழும் அந்த இடமே **"மனரம்மியம்"** நிறைந்ததாக இருக்கும். பிரியமான தேவ பிள்ளைகளே! தேவனுடைய **"பரிசுத்த ஆவியானவர்"** உங்களுக்குள் ஜீவ நீரூற்றைப் புறப்பட செய்வார் என தேவ வார்த்தை கூறுகிறது. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவராய் இருங்கள். அப்பொழுது **"வற்றாத நீரூற்றைப்"** போல் ஆவியானவரால் மாற்றப்படுவீர்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் கர்த்தர் ஒரு போதும் உங்கள் வாழ்க்கையை **"பாழடைந்து போக வெறுமையாய்"** காணப்பட **"வனாந்தரமாக"** மாறிப்போக இடமளிக்கமாட்டார். அவர் **"வற்றாத நீரூற்றாய்"** உங்களுக்குள் இருப்பாராயின், **"நீர்நிலைகளால் நிறைந்த பூமி பசுமையான வயல் வெளிகளாக மாறுவது போல்"** உங்கள் வாழ்க்கையும் **"செழிக்கும்"**. உங்கள் **"ஆசீர்வாதம்"** பெருகி ஓடும் போது அதன் மூலம் இன்னும் அநேகர் **"ஆசீர்வாதம்"** பெறுவார்கள். உங்களுக்குள் காணப்படும் **"ஜீவ நீர் ஊற்று ஒரு போதும் வற்றிப் போகாது."** கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த இந்த பொருத்தனை ஒரு போதும் மாறாது நீங்கள் அவரில் வாழ்ந்தால். உங்களை அவர் வற்றாத நீர் ஊற்றாய் மாற்றுவார். **இன்றைய நாள் வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தகப்பனே! நீங்கள் எனக்கு கொடுத்த ஆவியானவர் எனக்குள் ஜீவ நீரூற்றை புறப்படச் செய்வாராக, நீங்கள் என்னை வற்றாத நீரூற்றாக மாற்றும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்." (பரி:யோவான் 7:38)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 27
வெள்ளி

# இயேசுகிறிஸ்து மனதுருகும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 21 – 22

**"இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்."** (பரி:மாற்கு 1:41)

நித்திய ஜீவனுள்ள தேவனுடைய கிருபையைப் பெற்ற அருமையான பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் உங்களை வாழ்த்துகின்றேன். **"இன்றைய தினம் உங்களுக்கு மனமகிழ்ச்சியைத் தரும் இன்பநாளாக அமையட்டும்." "ஜீவ மன்னா"** தினதியானத்தை இன்றைய செய்திக்கூடாக உங்களை சந்திக்கிறேன். அன்பு நெஞ்சங்களே! இந்த உதய வேளையில் தேவ சந்நிதானத்தில் ஜெபித்து கிருபையின் ஆசீர்வாதங்களை பெற்று **"ஜீவ மன்னா"** தியானத்தின் மூலம் அன்பருக்கு செவி கொடுத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு இன்றும் தேவன் கிருபையின் **"வார்த்தைகளை"** பொழிந்து வரப்பிரசாதங்களால் உங்களை ஆசீர்வதிக்கிறார்.

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவனானவர் உங்களை மிகவும் நேசிக்கிறார். அதேபோல் அதிகமாக **"இரக்கம்"** செய்கிறார். அவர் மனதுருக்கத்தின் சம்பூர்ணமான தேவன். எமக்கு நேரிடும் இடுக்கமான சூழ்நிலைகளில் அனுதினமும் நாம் முகம் கொடுக்க நேரிடும் சங்கடமான காரியங்கள் இருதயம் வேதனையில் சூழ்ந்திருக்கும் வேளைதனில் இயேசு உண்மையிலே **"மனதுருக்கம் உள்ளவர் தானா?"** ஏன் எனக்கு இரக்கம் செய்யாதிருக்கிறார் என்ற நினைவுகள் எம்மை கலங்கச் செய்யக் கூடும். இந்தத் துன்பமான இறுக்கமான இருள் சூழ்ந்த நேரங்களில், எம் இருதயம் தாங்கிக் கொள்ள முடியாத துயரமடைந்திருக்கும் போதும். திசையறியாத நேரங்களில், நீங்கள் இயேசுகிறிஸ்துவை நோக்கி. **"என் ஆண்டவரே இன்னும் தாமதமாய் இருக்கிறீர்கள். என்னை சீக்கிரமாக விடுவிக்க மாட்டீர்களா?"** என புலம்பக் கூடும். ஆயினும் அவர் உங்களுக்கு இப்படி ஒரு துன்பகரமான சூழ்நிலையை அனுமதியளித்திருப்பது உங்களுக்கு ஒரு **"அறிவுறுத்தலாகவோ," "படிப்பினையாகவோ,"** இருக்கக் கூடும். நீங்கள் அதை உணர்ந்து திருந்தி மன மாற்றமடைந்து விட்டு விலகும்வரை அவர் **"பார்த்துக் கொண்டேயிருப்பார்."** அதை நீங்கள் சீர்படுத்தி, சீர்பொருந்தி செயல்பட தொடங்கியவுடன் அவர் சூழ்நிலைகளை மாற்றியமைக்கும்படியாய் செயல்பட ஆரம்பிப்பார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!

தேவ பிள்ளைகளே! **பரி:மாற்கு 1:40**இன்படி குஷ்டரோகி அவரிடம் வந்து. அவர் முன்பாக முழங்கால்படியிட்டு **"உமக்கு சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்"** என்று வேண்டிக் கொண்ட போது, இயேசு **"மனதுருகி"** கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் **"சித்தமுண்டு சுத்தமாகு"** என்றார். ஆகவே இன்றும் இயேசுகிறிஸ்து இவ்வண்ணமாகவே **"ஜீவிக்கிறவராக"** இருக்கிறார். உங்கள் வாழக்கையில் **"நன்மைகளை"** நிறைவேற்றுவார். இன்றும் **"மனதுருக்கத்தின் தேவனாகவே"** இருக்கிறார். அவரை நோக்கி முழங்கால்படியிட்டு ஜெபியுங்கள். ஜெயத்தை பெறுங்கள். **ஜெயம் பெறும் நாள்!**

ஜெபம்

பரலோக தகப்பனே! இயேசுகிறிஸ்து என்னும் தேவ குமாரனை எமக்களித்தவரே! மனதுருக்கத்தின் தேவன் தாமே என் மீது மனதுருகி எல்லா வேளைதனிலும் எனக்கு தயைபுரிந்து வழி நடத்துமாறு ஜெபிக்கிறேன். என்னைத் தெரிந்துக் கொண்டவரே ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." (பரி:யோவான் 6:37)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 28
சனி

கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளில் பிரியமாயிருக்கிற மனிதன் ஆசீர்வதிக்கப்பட்டவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 23 – 24

"கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்." (சங்கீதம் 128:1)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுவின் நாமத்தில் இன்றைய நாளில் **"உங்களுக்கு மகிழ்ச்சியும் சமாதானமும், நிறைந்த நாளாக வேண்டுமென நான் வாழ்த்துகின்றேன்."** தினந்தோறும் உங்கள் **ஆத்மீக ஆகாரத்தை** எடுத்துக் கொண்டு வரும் ஜீவ மன்னா தின தியானங்கள் மாதந்தோறும் பெற்றுக் கொள்ளும் நீங்கள் அனைவரும் **அதிர்ஷ்டக்காரர்கள்.** ஏனென்றால் ஒவ்வொரு நாளும் உண்ணுகின்ற உணவுகளில் சரீரம் வளர்ச்சியடைகின்றதைப் போல தினமும் உங்கள் ஆத்துமா வளர்ச்சி பெற **தேவ வசனம்** மிகவும் அவசியமானது.

தேவ பிள்ளைகளே! **தேவன் பேரில் பயம் கொண்டவர்களின் வாழ்க்கையில் மிகவும் நன்மையானவைகள் நடக்குமென** தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. விஷேசமாக **"கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடப்பவர்களுக்கு அவர் தமது இரகசியங்களை வெளிப்படுத்துவார்."** என்றும் எழுதப்பட்டுள்ளது. அதன் கருத்தானது தேவனுக்குப் **"பயந்து"** அவர் வழிகளில் நடப்பவர்களுக்கு தேவன் மிகவும் **"நெருக்கமாக"** இருக்கின்றார் என்பதாகும். மேற்கூறப்பட்ட **சங்கீதம்** 128:1 இல் பிரதான வேதாகம வசனத்தில் கர்த்தருக்குப் பயந்து **"அவர் வழிகளில் நடக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் அனைவரும் பாக்கியவான்கள்."** என்றாகும். **"தேவ பிள்ளைகளே, நீங்கள் மனங்கலங்காதிருங்கள்"** உங்களுக்குள் இருக்கும் தேவ பயம் உங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்து உயர்த்துவது மட்டுமல்லாது **"உங்கள் குடும்பத்தினரும் அந்த ஆசீர்வாதத்தினால்"** நிரம்புவார்கள். உங்கள் பரம்பரை முழுவதும் **"ஆசீர்வாதத்தை"** பெற்றுக் கொள்ளும். ஆனாலும் உங்கள் வாழ்க்கையில் பலவிதமான உபத்திரவங்கள், சோதனைகள், சவால்கள், பிரச்சினைகள், துன்பங்களுக்கு முகங் கொடுக்க நேரிடும். ஏனென்றால் என்னுடைய ஜீவியத்தில் இம்மாதிரியான அநேக காரியங்களுக்கு முகங் கொடுக்க நேரிட்டது. ஆனாலும் அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்து எல்லாவற்றையும் அநுபவித்து சகித்துக் கொண்டேன். பெரும்பாலான மனிதர்கள் என்னை பலவித அவமானம் நிந்தை, பல குற்றச் சாட்டுகளை என் மேல் சுமத்தினார்கள். அவை அனைத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து நான் மௌனமாக இருந்தேன். நீங்களும் அப்படியே இருங்கள். எல்லாவற்றிலும் தேவன் எம்மோடிருப்பார்.

தேவ பிள்ளைகளே! தேவன் பேரில் **"பயத்துடன்"** ஜீவிக்கின்றபடியால் எல்லா உபத்திரவங்கள், சோதனைகள், சவால்கள், துன்பங்கள், எல்லாவற்றிலும் **"வெற்றி"** பெற்று வெற்றிச் சிறந்த ஆத்மீக பயணத்தில் முன்னோக்கிச் சென்றுக் கொண்டிருக்கின்றேன். நீங்களும் தேவன் பேரில் **"பயத்தோடு"** ஜீவித்தீர்களானால் உண்மையிலேயே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். **உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்கள் பேரில் பயந்து நடக்கிறவர்கள் ஆசீர்வாதம் பெற்றவர்கள் என வசனம் கூறுகிறது. நான் கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்து ஆசீர்வாதம் பெற்றவராக வாழ கிருபை செய்யுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்."
(சங்கீதம் 112:1,2)

**ஜீவ மன்னா**

செப்டெம்பர் **29** ஞாயிறு

**தேவனின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தையின் வல்லமை அவர் விரும்புகிற காரியங்களை வாய்க்கப் பண்ணும் !**

**இன்றைய வேதவாசிப்பு**

1 சாமுவேல் அதி: 25 – 26

**"...என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."** (ஏசாயா 55:11)

அன்பு மிகுந்த என் அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் உங்களுடைய கரத்தை **"கர்த்தர் பிடித்து வழிநடத்தும்படியாய் பிரார்த்திக்கின்றதோடு. உங்களை வாழ்த்துகின்றேன்."** உலக முடிவைக் குறித்து, வேதாகமத்தினை வாசிக்கும் நாமனைவரும் நன்றாக அறிந்துக் கொண்டுள்ளோம். ஆகையால் எமக்கு உலகத்தைக் குறித்தும் அங்கே இருக்கின்ற எதைக் குறித்தும் எதிர்பார்ப்பு வைக்க முடியாது. ஆனாலும் **உள்ளம் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு கூறுகிறதாவது **"என் வாயிலிருந்து புறப்படும் எல்லா வசனங்களும் மீண்டும் வெறுமையாக என்னிடத்திற்கு திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."** அப்படியானால் தேவன் உங்கள் பேரில் வைத்திருக்கும் யோசனைகள் உயர்ந்த திட்டங்கள் அனைத்தும் உங்கள் வாழ்வில் நிறைவேறப் போகின்றதென நீங்கள் முழு உள்ளத்தோடு விசுவாசிக்க வேண்டுமல்லவா? உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைக் குறித்து நிறைவேற்றுகின்ற திட்டங்கள், **"உங்களுக்கு எதிர்பார்ப்புக்களை தரும் யோசனைகள்."** என்பதனால் அவைகள் **"தீமைக்கேதுவானவைகள் அல்ல" "அவைகள் சமாதானத்துக்கேதுவான நினைவுகளே"** என்று **எரேமியா 29:11**இல் கூறியிருப்பதைக் காண்கிறோம் அல்லவா? ஆகவே தேவனின் வசனத்திற்கு கீழ்படியாமல் தேவனுக்கு பிரியமில்லாதவைகளை நீங்கள் செய்வீர்களாயின் சாத்தானது தந்திரமான செயல்களுக்கும், அவன் விரிக்கும் வலைகளுக்கும்,கண்ணிகளுக்கும் சிக்குண்டு நீங்கள் ஆதரவற்ற நிலையில், தனிமையிலே துவண்டு பின்மாற்றலாகி போய் இருக்கும்போதும் உங்கள் தேவன் கூறுவது **"வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் செக்கச் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்"** போலாகும் என்று **ஏசாயா 1:18**இல் கூறுகிறார்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் எவ்வளவு தவறுகள் செய்திடினும், உங்கள் ஆத்துமா **பின்மாற்றமாகி** போகின்ற வேளையில் தேவன் உரைப்பது வழி தவறிப் போன **பிள்ளைகளே, மனம் திரும்பி வாருங்கள் உங்கள் பின்மாற்றத்தைச் சுகப்படுத்துவேன்** என்று அல்லவா? ஆகையால் உங்களை **அளவற்ற நேசத்தால்** அரவணைக்கின்ற இயேசுவுக்கு நீங்களும் **அன்பு** செய்து இயேசுவுக்கு **பிரியமான** வாழ்க்கையை பரிசுத்தத்தால் **அலங்கரித்துக்** கொள்ளுங்கள். **வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்கள் வாயிலிருந்து புறப்படும் எல்லா வசனங்களும் அவ்வாறே நடைபெறுகின்றபடியால் ஸ்தோத்திரம். உங்கள் வசனம் என் வாழ்க்கையில் நிறைவேறும்படி என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண்ணாகமம் 23:19)

ஜீவ மன்னா
செப்டெம்பர் 30
திங்கள்

# எம்மை சுகமாய் வாழ வைக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 சாமுவேல் அதி: 27 – 28

**“சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்.”** (சங்கீதம் 4:8)

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகிய உயிருள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் **“இன்றைய நாள் நல்ல நாளாக அமையும்படி”** பிரார்த்திக்கின்றேன். இன்றைய தினத்தின் **“ஜீவ மன்னா”** நாளிதழுக்கூடாக **“தேவ செய்தியின்”** மூலம் உங்களை சந்திப்பவர் நம்முடைய **“ஆண்டவரே”** நாள்தோறும் உங்களுக்கு அருளப்படுகிற இந்த மாதாந்த சஞ்சிகையின் மூலமாக இருதயங்களை தொட்டு, ஆத்துமாவை **“பெலனடையச்”** செய்து **“வல்லமையடையச்”** செய்வது பரிசுத்த ஆவியானவரே.

உங்களை உருவாக்கினவர் பரலோக பிதா உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை எண்ணிப்பாருங்கள். இந்த **“ஜீவ மன்னா”** தினதியானங்கள் நிறைந்த இந்த சஞ்சிகையை கடந்த **“இருபத்தி மூன்று மாதங்களாக”** உங்கள் கரங்களுக்கு கிடைக்க செய்து முன்னோக்கி வழிநடத்துவது அவரது கிருபையல்லவா? இதற்கு முக்கிய காரணம் **“நீங்களே.”** ஏனெனில் உங்கள் தகப்பன் **“நல்ல ஈவுகளை”** உங்களுக்கு கொடுக்கிறவர். நன்மையான காரியங்களை **“வழி நடத்துகிறவர்.”** தங்கள் பெற்றோரிடம் பிள்ளைகள் எதையாவது கேட்கும் போது அது **“நல்லது, நன்மையானது, தேவையானது எனக் கண்டால் அது நிறைவேற்றுகின்றார்கள்.”** பெற்றோர் இப்படி **“நன்மையானவற்றையே”** தங்கள் பிள்ளைகளுக்கு அளிக்கும்படியாய் ஆவலாய் இருக்கும் போது, எமது **“பரலோக தகப்பன்”** தன்னை நோக்கி விண்ணப்பிக்கும் தனது பிள்ளைகளுக்கு எவ்வளவு நன்மையான ஈவுகளை கட்டளையிடுவார் என்பதை எமது வேதம் எடுத்துக் கூறுகிறது. **“உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக”** இன்றைய நாளின் தியான வசனம் **சங்கீதம் 4:8**இல் வெளிப்படுத்துவது **“உங்கள் தேவன் ஒருவரே உங்களை சுகமாக தங்கப் பண்ணுகிறவர்.”** என்பதாகும்.

தேவ பிள்ளைகளே! உங்கள் ஆண்டவர் **“பரலோகத்தில்”** வாசம் பண்ணுகிறவராயினும் புவிதனில் வாழும் நீங்கள் ஒவ்வொருவரும் **“சுகமாய் ஜீவிக்கும்படியாக”** கிரியை செய்கிறவராயிருக்கிறார். வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகள் துன்ப துயரங்கள் சங்கடங்களினால் உங்கள் உள்ளம் கலங்கி தவித்துக் கொண்டிருக்கலாம். இருதயம் சமாதானத்தை இழந்திருந்தாலும், நீங்கள் **“சந்தோஷத்தை மனமகிழ்ச்சியை”** காண ஏங்கிக் கொண்டிருந்தாலும், போராட்டத்தால் **“மனச்சோர்ந்து” “மானசீகமாக”** விழுந்து போயிருந்தாலும் எல்லாவிதமான காரியங்களிலிருந்தும் உங்களை இரட்சித்து, விடுதலையையும் உள்ளத்திற்கு **“சமாதானத்தையும்”** கொடுத்து சுகமாய் தங்கப்பண்ணுவார். இன்றும் சமாதானத்தின் தேவன் உங்களோடிருக்கிறார். **இன்றைய தினம் வெற்றியின் சிறந்த நாள்!**

ஜெபம்

என் நேச தகப்பனே! என் சுகத்தை விரும்புகிறவரே! நானும் என் வீட்டாருமோ உங்கள் சொந்தமாயிருக்கிறோம் அப்பா பிதாவே எங்களை சமாதானத்தினால் நிரப்பி சுகமாய் உம் பாதப்படியில் தங்கியிருக்க கிருபையை கட்டளையிடுங்கள். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது.” (நீதிமொழிகள் 3:23)

- பிரசங்கங்கள், பாடல்கள் VOL 01 தொடக்கம் 05 வரை, அசுத்த ஆவிகளை துரத்தும் ஜெபம் (சிங்களம்) காட்சிகளோடு அடங்கிய பாடல்கள் 20 அடங்கிய ''மெமரி சிப்.'' (இவைகளை கையடக்க தொலைபேசியில் இணைத்துக் கேட்க முடியும்) சிங்களத்தில் மாத்திரம்.



- ஜீவ மன்னா தினத்தியானங்கள். (சிங்களத்திலும் தமிழிலும்).
- ஜீவ மன்னா சஞ்சிகை (சிங்களம்).
- பாவத்தின் விளைவும் பாதாளத்தின் நிலையும் புத்தகம். (சிங்களத்திலும் தமிழிலும்).
- சுப ஹோராவ. (சிங்களம்.)
- ''ரன்மினி சிந்தன'' தேவ வேண்டுதல்கள். (உங்கள் ஜெப உதவிக்காக சிங்களத்தில்.)




- நற்செய்தி கைப்பிரதிகள்.
- ஸ்தோத்திரபலி புத்தகம். (சிங்களத்திலும் தமிழிலும்)
- பாடல் புத்தகம். (சிங்களத்திலும் தமிழிலும்)




- தேவ வசனங்கள் அடங்கிய கைக்குட்டைகள். (சிங்களத்திலும் தமிழிலும்)




- தேவ வசனங்கள் அடங்கிய ஸ்டிகர் கீடெக். (சிங்களம், தமிழ், ஆங்கிலம்.)
- தேவ வசனங்கள் அடங்கிய பெனர். (சிங்களம், தமிழ், ஆங்கிலம்.)




- பரிசுத்த வேதாகமம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)







உங்களுக்கு அவசியமானது இவைகளில் எதுவாக இருந்தாலும் குறைந்த விலையில் ஒரு கிழமைக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

"உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்."



சங்கீதம் 119:160

## இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக !!!

### 24 வது வெளியீடு

**தேவ பிள்ளைகளே!!!**

ஜீவ மன்னா தின தியானங்கள் 24வது வெளியீடு வரை (2 வருடம்) உங்களுக்கு தொகுத்து அளிப்பதற்கு எமக்கு கருணை செய்த தேவனுக்கு என் முழு இருதயத்தோடு நன்றி செலுத்துகின்றேன். எமது ஜீவ மன்னா தினதியானங்கள் இரண்டு வருடங்களாக எந்தவித தடையுமின்றி உங்கள் கரங்களில் கிடைக்கச்செய்த தேவனுக்கு எண்ணிலடங்கா ஸ்தோத்திரங்கள். தினமும் கிடைக்கின்ற விமர்சனக் கடிதங்களுக் கூடாக அநேகக் காரியங்களை நாமறிந்து இன்னும் அதிகமாக இந்த ஆவிக்குரிய சஞ்சிகையைத் தொடர்ந்து முன் கொண்டு செல்வதோடு ஜீவமன்னா வாசகர்களாகிய உங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் தைரியத்தைக் குறித்தும் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.

அன்பார்ந்தவர்களே, ஜீவ மன்னா தினதியானங்கள் மூலம் பெரும்பாலானோரின் வாழ்க்கைகளில் ஆத்மீக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மன்னா விமர்சனக்கடிதங்களில் எழுதியுள்ளதைக் காணும் போது என்னுள்ளம் சொல்ல முடியாத சந்தோசத்தினால் நிறைகின்றது. சத்துருவானவன் எமக்கு விரோதமாக கொண்டு வரும் சகல தடைகளின் மத்தியில் உபவாசத்தோடும், ஜெபத்தோடும் தயாரித்து தொகுத்து உங்கள் கரங்களில் கிடைக்கச் செய்கின்ற இத் தியானங்கள் மாபெரும் பலனைத் தருகின்றதென்பதை அறிந்து கொள்ளும் போது என் ஆவியானது ஆனந்தமடைகிறது. ஆயிரங்கணக்கான வாசகர்கள் மத்தியில் எமக்கு விமர்சனக் கடிதத்திற் கூடாக எம்மை மகிழ்விக்கும் உங்களை மேன்மை பாராட்டுகின்றேன். விமர்சனக் கடிதம் எழுதி உங்களது விலையேறப்பெற்ற காலத்தை அர்ப்பணிப்பதைக் குறித்து நன்றி செலுத்துகின்றேன்.

அன்பார்ந்தவர்களே, "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்று கூறியிருக்கும் நம் இயேசுவானவர் ஜீவனுள்ளவராகவே இருக்கின்றார். ஆகையால் ஆசீர்வாதமான மன்னா புத்தகத்தை உங்கள் நண்பர்கள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்து அன்புக்கட்டளையை நிறைவேற்றுங்கள். புதிய முகவரிகளை எமக்குக் கிடைக்கச் செய்யுங்கள் இருளிலே பிரகாசிக்கின்ற ஒளியான தேவ இராஜ்ஜியத்திற்கு விரோதமாக இருளின் இராஜ்ஜியம் செயல்படும் யுகத்தில் நாம் வாழ்கின்ற படியால் தேவ இராஜ்ஜியத்தின் காரியங்களுக்குக் கரம் கொடுக்கும் நீங்கள் அனைவரும் ஆவியில் விழித்திருந்து செயல்படுமாறு உங்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். இயேசுகிறிஸ்துவின் அநுக்கிரகம் உங்கள் அனைவருடனும் இருப்பதாக இயேசு துணை!

**மன்னா வாசியுங்கள்! ஆத்மீக அறிவில் நிரம்புங்கள்!** **போதகர் ஏ.ஜே.ஜோசப்**

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவு இலக்கம்: CME/003/12/NPO

**இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்**
இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.
☎ 011-2334865 📱 0714-922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org

இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.